கிழக்கெங்கும் பயணிக்கவுள்ள மலைமுரசு

50 வது இதழில் இருந்து

ஆனி மாதம் 08ம் திகதி

June 22, 2013

மலைமுரசு®

அறைவு 01 இயம் 48

MALAIMURASU

உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்

வார இதழ்

விலை – 20.00 Registered as a Newspaper in Sri Lanka பக்கங்கள் – 10 பிரதி சனி தோறும் திருமலையில் இருந்து வெளியாகும் பத்திரிகை

# புதிய முதல்வரா ?

## கிழக்கு மாகாணசபையின் இழுபறிக்குப் தீர்வு



கிழக்கு மாகாண சபையின் இழுபறி நிலைக்குத் தீர்வாக புதிய முதல்வர் ஒருவரை நியமிப்பது என்ற கோட்பாட்டு இணக்கத்தை அனைத்துத் தரப்பினரும் எட்டியுள்ளதாகத் தெரியவருகின்றது.

கடந்த நாட்களில் கிழக்கின் ஆளுங்கட்சி அங்கத்தவர்களுக்கு எழுந்த அதிருப்தி நிலையினைத் தொடர்ந்து கிழக்கில் மக்களுக்குச் சேவையாற்ற கிழக்கின் முதல்வர் அப்துள் மஜீத் அவர்களும், கிழக்கின் ஆளுனர் ரியர் அட்மிரல் மொகான் விஜேவிக்ரமவும் தடையாக உள்ளார்கள் எனப் போர்க்கொடி எழுப்பியிருந்தனர்.

அத்துடன் இவர்கள் இருவரையும் குறித்த பதவிகளில் இருந்து மாற்ற வேண்டும் என்றும் கோரிக்கைகளை ஆளும் தரப்பின் கிழக்கு மாகாண அமைச்சர்கள் உட்பட அங்கத்தவர்கள் சனாதிபதியை நோக்கி வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

## கறுப்புப் பட்டிக்கும் இழுபறிக்கும் எவ்வித தொடர்பும் இல்லை: எதிர்கட்சித் தலைவர்



இவற்றைச் சாதகமாகப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளும்வரை மாகாண சபையின்.. 7

## கிழக்கு மாகாண சபைக்கும் இல்லாமல் போகும் காவல்துறை அதிகாரம்

இலங்கையின் மாகாண சபைகளுக்கு காவல்துறை அதிகாரங்களை வழங்கமுடியாது என திட்டவட்டமாக இலங்கையின் பாதுகாப்புச் செயலர் அறிவித்துள்ளார்.

இத் திட்டவட்டமான முடிவை இந்தியாவிற்கு தாம் தெளிவாகத் தெரிவித்துள்ளதாகவும் பாதுகாப்புச் செயலர் விளித்தார்.

" இந்திய மற்றும் இலங்கையின் உயர் மட்டக் குழுக்களிடையிலான சந்திப்புக்களில் நானும்.. 7

## சம்பூர் மக்களுக்கு 2ம் கட்ட வீட்டுத் தொகுதிகள்

இடம்பெயர்ந்த சம்பூர் மக்களுக்கு கட்டிக்கொடுக்கப்படும் வீடுகளின் இரண்டாம் கட்ட வீட்டுத் தொகுதியினைப் பயனாளிகளுக்கு வழங்கும் நிகழ்வொன்று 17ம் திகதி நடைபெற்றுள்ளது.

கிழக்கின் 22ம் படையணியின் உதவியுடன் உருவாக்கப்பட்டுள்ள இவ் வீடுகளின் திறப்புக்கள்.. 7

## பேஸ்புக்கிற்கு ஆப்பு!!




பேஸ்புக் மற்றும் டுவிட்டர் சமூக வலைத்தளங்களின் ஊடாக நாட்டின் தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல்கள் எழுவதாக இலங்கையின் பாதுகாப்புச் செயலர் கோட்டாபாய இராஜபக்ச அண்மையில் கருத்து வெளியிட்டுள்ளார். 7

## மருத்துவ வண்டியில் பிரசவம் – தாயும் சேயும் நலம் –

கிண்ணியா தளவைத்தியசாலையில் இருந்து திருகோணமலை ஆதாரவைத்தியசாலைக்கு கர்ப்பிணித் தாய் ஒருவரை இடமாற்றம் செய்ய முயற்சித்தபோது கிண்ணியா வைத்தியசாலை வளாகத்திலேயே மருத்துவ வண்டியில் பிரசவம் நடைபெற்றுள்ளது.

வைத்தியசாலை வளாகத்தில் அம்புலன்ஸ் வண்டியில் சுகப் பிரசவம் நடைபெற்ற பின்பு குழந்தை மாத்திரம் பிரசவ அறைக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் சுமார் ஒரு மணி நேரம் அம்புலன்ஸ் வண்டியில் மருத்துவிச்சியைத் தவிர தாதியோ, வைத்தியரோ அம்புலன்ஸ் வண்டிக்குள் வந்து தாயை கவனிக்கவில்லை.. 7

## விறகு வண்டில்களால் கிண்ணியாவில் பதற்றம்

கிண்ணியா குட்டிக்கராச்சி பிரதேசத்தில் சட்ட விரோதமாக விறகு ஏற்றி வந்ததாக கூறப்படும் ஆறு வண்டில்களை விசேட அதிரப்படையினர் காவல் நிலையத்திற்கு கொண்டுசெல்வதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பொதுமக்கள் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டதை தொடர்ந்து பதற்றமான நிலைமை ஏற்பட்டுள்ளது குறித்த வண்டில்களை விசேட அதிரடிப்படையினர் விறகுகளுடன் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை

## பாரதி விதவைகள் சங்கப் பொதுக் கூட்டம்

பாரதிபுரக் கிராமத்தில் உள்ள பெருமளவு விதவைகளின் நலனோம்பு விடயங்களை முன்னெடுப்பதற்காக 15.06.2013 சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு கிராம அபிவிருத்திச் சங்க கட்டிடத்தில் விதவைகள் சங்கத் தலைவி திருமதி. அலகுதுரை சந்திரமலர் அவர்களின் தலைமையில் கூட்டமொன்று நடைபெற்றுள்ளது. இதில் இந்துக் குருமார் சங்க தலைவர் திரு. இ. பாஸ்கரன் பொருளாதார அமைச்சின் திருகோணமலை மாவட்ட திட்டப் பணிப்பாளர் திரு. ஜீ. பாலகுமாரன், கிராம சேவகர்,.. 7

## தரிசனம் தொலைக்காட்சி அலைவரிசையின் பொது அறிவுப் போட்டி



7

VBC

aat SRI LANKA Association of Accounting Technicians of Sri Lanka

STUDENT REGISTRATION NOW ON

for 2014 JANUARY EXAMINATION

வகுப்புகள் ஆரம்பம்

2013 ஜுலை மாதம் 13ம் திகதி

சனிக்கிழமை காலை 9.00 மணி

aat SRI LANKA நிறுவனத்தினால் திருகோணமலையில் அங்கீகரிக்கப்பட்ட ஒரே கல்லூரி

(aat மாணவர் பதிவுப் புத்தகத்தின் 26வது பக்கத்தைப் பார்க்க - VIHE)

Veal Business College

No. 159A Sea View Road, Trincomalee 0777 535 738

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
159A, 2ம் மாடி, கடல் முக வீதி,
திருக்கோணமலை.
malaimurasu@hotmail.com
0754252042

## வணக்கம்

கிழக்கு மாகாண சபையில் ஆளுங்கட்சியினரிடையே எழுந்துள்ள முரண்பாடுகள் எமக்குச் சில ஆதர்சனங்களைத் தெரிவிக்கின்றன.

இலங்கையின் அரசியற் போக்கில் ஒட்டுமொத்தமாக சிறுபான்மை இனங்கள் எவற்றையும் சாதிக்கப் பெரும்பான்மையின அரசியலாளர்கள் விடப்போவதில்லை என்பதுதான் அந்த உண்மை.

உலக போராட்ட வரலாறுகளை எடுத்துப் பார்த்தால் விடுதலைக்காகப் போரிடும் நாட்டிலுள்ள இனங்களில் பெரும்பான்மையினத்துடன் ஒரு சிறுபான்மையினம் மோதிக் கொண்டிருக்க அந்நாட்டில் இருக்கும் மூன்றாவது சிறுபான்மையினம் பெரும்பான்மையினத்துடன் சேர்ந்து போராடும் சிறுபான்மையினத்திற்கு எதிராக நடந்துகொள்ளும் படிப்பினையைக் கற்றுக் கொள்ளலாம். இதனைத் தவிர்க்க முடியாது.

உதாரணமாக தென்னாபிரிக்க நிறவெறி அரசிற்கு எதிராகக் கறுப்பின மக்கள் போராடியபோது அங்கிருந்த இந்திய குடிமக்கள் வெள்ளை நிறத்தவருக்கு ஆதரவு அளித்ததை நாம் நினைவு கூறலாம். இலங்கையிலும் அதேதான் நடைபெற்றது. தமிழர்கள் ஆயுதப் போரில் ஈடுபட்ட போது முஸ்லிம்கள் பெரும்பான்மையுடன் இணைந்திருந்தனர்.

போரின் போது இனவாத முகம் கொண்டிருந்த பேரினவாத அரசு தற்போது போர் முடிவுக்கு வந்த பின் வள அழிவுக்கு உட்பட்டுவிட்ட இனத்தை விடுத்து முஸ்லிம்களுக்கு எதிராக தனது மதவாத முகத்தை முன்வைத்துள்ளது.

அதன் வெளிப்பாடுகள் பல்வேறாக இருந்துள்ளன. தற்போது அதிகாரங்களைக் கையில் எடுத்துக் கொண்டு கூட்டமொன்று முஸ்லிம்களின் பொருளாதார வளத்தைக் குறிவைத்து வேட்டையாடத் தொடங்கியுள்ளன.

அதன் மற்றொரு வெளிப்பாடே கிழக்கு மாகாண சபையில் முஸ்லிம் அமைச்சர்களால், அங்கத்தவர்களால் எதையும் நிறைவேற்ற முடியாதபடி இடப்பட்டுள்ள முட்டுக்கட்டைகள்.

இவற்றைக் களைந்து முன்செல்வதென்பது தனியே ஒரு சிறுபான்மையினத்தால் எப்போதுமே சாத்தியப்படப் போவதில்லை.

எனில் ஒற்றுமைப்பட்ட சிறுபான்மைகளால் மட்டுமே தமது ஆகக்குறைந்த உரிமைகளைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பாவது எய்தப்படுகின்றது.

ஒற்றுமையை அடைவதற்கு திறந்த மனமும் விட்டுக்கொடுப்பும் தனி மனித வாழ்வில் போதுமானவையாக இருக்கும்.

அரசியலில் ஒற்றுமைப் படுவதற்குத் தேவையானவற்றைப் பற்றிப் பேசுவது சிரேட்ட அரசியில்வாதிகளின் கடமைகளில் ஒன்றல்லவா........?

தனிப்பட்ட நலன்களுக்கு அப்பால் அரசியலில் ஒற்றுமை என்பது மிகப் பெரிய விட்டுக்கொடுப்புக்களுடன் ஆரம்பமாகும் என்பதால்தான் முதலமைச்சர் பதவியை விட்டுத்தர முனைந்ததா தமிழர் தரப்பு?
சிந்தியுங்கள் தோழர்களே........!

ஆ.ர்

## திருமலையிலும் பணத்தை இழந்த மக்கள் முறையிடலாம்...

இலங்கையின் பலபாகங்களிலுமுள்ள மக்களிடமிருந்து மில்லியன் கணக்கான ரூபாய்களை மின்னஞ்சல் லொத்தர் மூலம் மோசடி செய்த நைஜீரியப் பிரசை ஒருவரை கணணி குற்றத்தடுப்புப் பிரிவுக் காவல் துறையினர் கைது செய்துள்ளனர்.

ஐக்கிய நாடுகள் சபையினால் நடாத்தப்பட்ட குலுக்கல் லொத்தரில் ஐக்கிய இராச்சிய பவுண்கள் 5 லட்சத்தை நீங்கள் வென்றுள்ளீர்கள் என மோசடியான மின்னஞ்சல்களை அனுப்பிய இக் கறுப்பின மோசடிப் பேர்வழி மக்களிடமிருந்து பல மில்லியன் ரூபாய்களைச் சுருட்டியிருப்பது தெரிய வந்துள்ளது.

இதற்கென அனுப்பப்பட்ட மின் அஞ்சல்களில் ஐக்கிய நாடுகள் சபையின் கடிதத் தலைப்பு களவாடப்பட்டு பயன்படுத்தப் பட்டிருப்பது விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

சுமார் 18 லட்சம் இலங்கையரைத் தனது மோசடியான 8 இலத்திரனியில் அஞ்சல் முகவரிகளிலிருந்து தொடர்பு கொண்டுள்ள இக் களவாணிச் சந்தேக நபர் அவற்றுள் பலவீனமான வர்களிடமிருந்தும், பேராசைக் காராடகளிடமிருந்தும் கிடைக்கும் பதில் இலத்திரனியல் அஞ்சல்களைத் தொடர்ந்து அவ்வாறானவர்களிடம் நம்பிக்கையாக தொடர்பாடலை மேற்கொண்டுள்ளான். அத்துடன் நம்பிக்கை நிலையை அவர்களிடை யேயான தொடர்பாடல் அடைந்தவுடன் சுங்கத் தீர்வை என்ற பெயரில் மோசடியான சுங்க ஆவணங்கள் சிலவற்றையும் தயாரித்து தீர்வைக்குச் செலுத்தவென 2 இலட்சம் ரூபாய்களை செலுத்தும் படியும் கோரியுள்ளான். அதனை நம்பிப் பல மக்கள் மில்லியன் கணக்கான ரூபாய்களை இவ்னுக்குத் தாரைவார்த்திருப்பதாகவும் அதற்கு உடந்தையாகச் செயற்பட்ட உள்நாட்டவர்கள் சிலரும் கைதாகியிருப்பதாகவும் குற்றப் புலனாய்வுப் பிரிவுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## சம்பூரில் சிங்கப்பூர்

சம்பூரின் உயர் பாதுகாப்பு வலயத்தினுள் உருவாக்கப்பட்டு வரும் வர்த்தக வலயத்தில் சுமார் 1000 ஏக்கர் நிலப்பரப்பில் முதலீட செய்வதற்கு சிங்கப்பூர் தயாராகியுள்ளது.

இத்திட்டத்திற்கு சுமார் 4 பில்லியன் டொலரை முதலிடும் சிங்கப்பூர் அதற்கான சாதக சமிக்ஞையை இலங்கை அரசிடமிருந்து பெற்றுள்ளதாகவும் தெரிய வருகின்றது. சம்பூரில் பாரிய கைத்தொழில் பேட்டையொன்றை உருவாக்கும் சிங்கன்பூரின் இம் முயற்சியினை சிங்கப்பூர் நிறுவனமொன்று மேற்கொள்ளவுள்ளது. தற்போதைக்கு சுமார் 819 ஏக்கர் நிலப்பரப்பில் இப்பாரிய கைத்தொழிற் பேட்டையின் ஆரம்ப மாதிரிகள் வரையப்பட்டு அனுமதிக்காக அனுப்பப்பட்டுள்ளன. கட்டங்கட்டமாக இத்திட்டம் நிறைவேற்றப்படவுள்ளதுடன் அதன் முதற்கட்டப்பணியாக தமக்கென தனியானதொரு கப்பல் கட்டுமிடமொன்றை (ஜெட்டி) யும், அதனுடன் இணைந்த களஞ்சியசாலைகளையும் கட்டி முடிப்பதற்கு சுமார் 700 மில்லியன் ரூபா செலவிட மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

இரண்டாங் கட்டமாக கற்கரி மற்றும் உலோகத்தாது உற்பத்தி நிலையங்களை சுமார் 164 பில்லியன் ரூபாச் செலவிலும் மூன்றாவதும் இறுதியுமான கட்டமாக 252 பில்லியன் ரூபாச் செலவில் கப்பல் கட்டுமான மற்றும் திருத்தகம், பொறி எந்திர உற்பத்தித் தொகுதி, வாகனப் பொருத்து நியைம் மற்றும் மேற்சொன்ன முப்பெரும் தொழில்களுக்கும் தேவையான உதவிகளை வழங்கும் சிறு உற்பத்திச் சாலைகள் உட்பட சேவை வழங்கும் நிறுவனங்களைக் கொண்ட பாரிய தொழிற்றுறையை உருவாக்கும் முதலீட்டு முயற்சியாகவே இச் செயற்பாடு இருக்கும் என்று தெரியவருகின்றது.

## மூதூரில் "மக்தப்" அல்-குர் ஆன் மத்ரஸா

அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபையின் கண்காணிப்பின் கீழ் நாடு ரீதியாக சிறுவர்களுக்கு இஸ்லாமிய விழுமியங்களை முன்னெடுக்கும் நோக்கில் "மக்தப்" என்ற பெயரில் அல்-குர்ஆன் மத்ரஸாக்களை நடாத்தி வருகின்றது. இதில் சுமார் 13000 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் இதன் கீழ் கல்வி பயின்று வருகின்றார்கள்.

தற்போது மூதூரிலும் முதன் முதலாக "மக்தப்" மத்ரஸாவினை மூதூர் பெரிய பள்ளிவாயல் நிருவாகத்தின் பாரிய முயற்சியில் 17.06.2013ம் திகதி 20 மாணவர்களைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (ஜவாஹிர்)



## திருமலை விபத்தில் மாத்தறை பிரசை பலி

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு சீனக்குடா மீன்பிடி துறைமுகத்திற்கு முன்னால் இடம்பெற்ற விபத்தொன்றில் மாத்தறையை பிறப்பிடமாகக் கொண்ட பிரசையொருவர் பலியாகியுள்ளனர்.

திருகோணமலையிலிருந்து கிண்ணியா ஊடாக கொழும்புக்கு சேவையில் ஈடுபடும் பேரூந்தே இவர் மீது மோதியுள்ளது. சம்பவத்தில் மாத்தறையை பிறப்பிடமாகவும் சீனக்குடாவை வசிப்பிடமாகவும் கொண்ட சாந்தகுமார என்பவரே உயிரிடந்துள்ளதாக அடையாளம் காணப்பட்டுள்ளது. பேரூந்தின் சாரதியும், நடத்துனரும் பொலீசரால் கைதுசெய்யப்பட்டுள்ள நிலையில் கைது செய்யப்படும்போது அவர்கள் இருவரும் மதுபோதையில் இருந்ததாகவும் தெரியவந்துள்ளது.

## கட்டளையல்லாத்தர வான்படையினரின் பயிற்சி நிறைவு

கட்டளையல்லாத்தர வான் படையிருக்கான முகாமைத்துவப் பயிற்சியொன்றை வான்படையின் திருகோணமலைச் சீனன் குடா யுத்தப் பயிற்சிக் கல்லூரியில் நடந்தது முடிந்துள்ளது.

இம்மாதம் 17ம் திகதி நிறைவுற்ற இப்பயிற்சி நெறியில் இலங்கை வான் படையின் தளக் கட்டளைப் பிரிவின் பிரதிப்பணிப்பாளர் ஏர் கொமடோர் என். எச்.வி குணரட்ண பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்திருந்தார். 48 சிரேட்ட அலவலர்களையும் 37 இளநிலை அலுவலர்களையும், 2 இராணுவத்தினரையும், 2 கடற்படையினரையும் உள்ளடக்கி இராசரட்டைப் பல்கலைக்கழகத்தால் இப் பயிற்சி நெறி நடாத்தப்பட்டுள்ளது.

## கடலில் தத்தளித்த கனங்குறைந்த உல்லாசப் படகை மீட்டது கிழக்கு கடற்படை

திருகோணமலைக் கடற் பிரதேசத்தில் 18 கடல் மைல்களுக்கு அப்பால் கடலில் தத்தளித்துக்கொண்டிருந்த கனங்குறைந்த உல்லாசப் படகொன்றைக் கிழக்குக் கடற்படை மீட்டு திருகோணமலைத் துறைமுகத்திற்குப் பாதுகாப்பாகச் செலுத்தி வந்தள்ளது.

டினாஸ்டி 1 எனப் பெயரிடப்பட்ட இக்கலத்தை தமது பாகாப்புக் காவல் கடமையின் போது கடற் படைக் கலங்களான பி 4442ம் பி 480ம் 09ம் திகதி மாலை கண்டுகொண்டுள்ளன.

சிங்கப்பூரிலிருந்து காலி துறைமுகத்திற்கு பயணம் செய்துகொண்டிருந்த இப்படகு காலநிலை கோளாறால் பாதிக்கப்பட்டுள்ளது.

இப்படகில் இருந்த 14 பயணிகளும் காப்பாற்றப் பட்டுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசமுரசு

## 24 மணி நேரத்திற்குள் 571 தொலைபேசி அழைப்புக்கள் 3.2 மில்லியன் செலவு – விசாரணைகள் ஆரம்பம் –



தனது கைத்தொலைபேசி-யினை வெளிநாட்டிலும் பாவிக்கக்கூடிய வசதியினைப் பெற்றுக்கொண்ட வர்த்தகர் ஒருவர் சுமார் 3.2 மில்லியன் ரூபாய்களை அவ்வசதியின் ஊடாக பேசிச் செலவு செய்துள்ளார்.

அவ்வசதி வழங்கப்பட்டு 24 மணிநேரத்திற்குள் இவ்வாறு பேசிச்செலவுசெய்ததை அடுத்து கைத்தொலைபேசிச் சேவையை வழங்கும் கம்பனியானது அவ் வாடிக்கையாளருக்கு எதிராக காவல்துறையின் நடவடிக்கைகளுக்கு விண்ணப்பித்துள்ளது.

பயங்கரவாத நடவடிக்கைகளுக்காக இத் தொடர்பு பயன்படுத்தப்பட்டதா என்ற கோணத்தில் காவல்துறையின் கொழும்பு மோசடிப் புலனாய்வுப் பணியகம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

இச் சேவையினைப் பெற்றுக் கொள்வதற்காக வெறும் 10,000 ரூபாய்களை மட்டுமே அவ் வர்த்தகர் தொலைபேசிச் சேவை வழங்கும் நிறுவனத்தில் வைப்பிலிட்டுள்ளார். இம் மோசடி தொடர்பாகத் தொடரப்பட்டுள்ள வழக்கின் முதலாவது அமர்வில் பிரதிவாதியாக குறிப்பிடப்பட்டுள்ள வர்த்தகர் சார்பில் தோன்றிய சட்டவாளர்கள் " தமது தரப்பினர் குற்றமற்றவர் என்றும் கம்பனியால் வழங்கப்பட்ட சிம் அட்டையை இத்தாலியிலுள்ள தனது கட்சிக்காரரின் மைத்துனரே பாவிப்பதாகவும் அதற்கான கொடுப்பனவைச் செய்யும் கடப்பாடு அம் மைத்துனருக்கே இருகின்றது என்றும்" தெரிவித்துள்ளனர்.

## மூன்று குற்றச்சாட்டுகளை எதிர்கொள்ளும் பணிநீக்கப்பட்ட பிரதிக் காவல் மா அதிபர்

தற்காலிகமாகப் பணிநீக்கப்பட்டு கைது செய்யப்பட்டுத் தடுப்பிலுள்ள பிரதிக் காவல் மா அதிபதியான வாஸ் குணவர்த்தனவின் மீது சதித்திட்டம் தீட்டியமை, கொலைக்கு உடந்தையாக இருந்தமை, மற்றும் கொலைச் சான்றுகளை மறைத்தமை ஆகிய மூன்று குற்றச்சாட்டுகளை முன்னிறுத்தி வழக்குகள் தாக்கல் செய்யப்படும் எனத் தெரியவருகின்றது.

அவருக்கு வழங்கப்பட்டிருந்த அரச வாகனத்தைக் கைப்பற்றியுள்ள காவல்துறையினருக்கு அவருடைய உடைகள், பதக்கங்கள், மற்றும் அவரது பொறுப்பிலுள்ள அரச வளங்கள், மூலங்கள் ஆகியன 19ம் திகதி வரை திருப்பித் தரப்படவில்லை என காவல்துறையினர் தெரிவித்துள்ளனர். இதற்காக மேற்கொள்ளப்பட்ட முதல் முயற்சியானது தோல்வியில் முடிவடைந்துள்ளது.

## கீழ் ஆடையின்றி நீராடிய பெண்கள் கைது

ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றும் பெண்கள் இருவர் கெத்தாவல அணைக்கட்டுப்பகுதியில் கீழ் ஆடையின்றி அரை நிர்வாணக் குளியலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைதாகியுள்ளனர். கம்பஹா காவல்துறையால் கைது செய்யப்பட்ட இவர்களுடன் மேலும் மூன்று ஆண்களும் இருந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

மதுவுக்கடிமையாகவிருந்த 18 வயதான இப் பெண்களின் செயல் பொதுமக்களின் இயல்புவாழ்க்கைக்கு குந்தகம் விளைவித்ததாகவும், இந்நடவடிக்கை தண்டனைக்குரியது என்றும் காவல்துறை தெரிவித்துள்ளது.

## பெற்றோர் கொடுமை வயதடையாப் பெண் காவல்துறையில்

பதினைந்து வயதான பாடசாலை மாணவியொருவர் தனது பெற்றோர்கள் கொடுமை செய்வதாக கூறி காவல்துறை அலுவலகத்திற்கு வந்து முறையிட்ட சம்பவம் ஒன்று களுத்துறைக் காவல்துறை பிரிவில் பதிவாகியுள்ளது. தனது காதலை ஏற்றுக்கொள்ள மறுக்கும் பெற்றோர் அதனையிட்டு தன்னைக் கொடுமைப்படுத்துவதாகவும் அக் கொடுமைகளிலிருந்து தப்பிக்கொள்ள தான் தனது காதலனின் வீட்டில் சென்று வாழ அனுமதிக்க வேண்டும் என்று பாடசாலைச் சீருடையில் காவல்துறை அலுவலகத்திற்குத் தனது எதிர்கால மாமியாருடன் வருகை தந்நத இப் பள்ளி மாணவி கோரிக்கையை விடுத்துள்ளார்.

நடைபெறவிருக்கும் க.பொத.சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவி தற்போது காவல்துறைப் பராமரிப்பில் இருப்பதாகவும் விசாரணைகள் நடைபெற்றுவருவதாகவும் தெரிய வருகின்றது.

## இலங்கைக் கழுதைகளைப் பாதுகாக்கும் இந்தியா

மன்னாரில் உள்ள இலங்கைக் கழுதைகளை பாதுகாப்பது எப்படி என்ற ஆய்வுக்காக இந்தியர்கள் சிலர் கடந்தவாரம் மன்னாருக்கு விஜயம் செய்திருந்தனர். இவர்கள் இந்தியாவின் கழுதைகள் சரணாலயத்தைச் சேர்ந்தவர்கள். மன்னாரின் தெருவில் அலையும் கழுதைகள் மன்னார் மக்களுக்குத் தலையிடியாக உள்ளதாக தெரிவித்த மன்னாரின் உதவி நகரசபைத் தலைவர் சாலை விபத்துக்களில் அவை பலியாவதாகவும் மேலும் தெரிவித்தார்.

## செய்திக் குறிப்புகள்

### வளப் பற்றாக்குறையை நிவர்த்திப்பது சம்பந்தமான ஆலோசனைக் கூட்டம்

மூதூர் தளவைத்திய-சாலையில் நிலவும் பௌதீக மற்றும் ஆளணிப் பற்றாக்குறையை நிவர்த்திப்-பது சம்பந்தமான ஆலோசனைக் கூட்டம் சனிக்கிழமை மூதூர் அல்-ஹிதாயா மகா வித்தியால்ய கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

வைத்தியசாலை அபிவிருத்தி சங்கத் தலைவரும் முன்னாள் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான கே.எம்.தௌபீக் தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் மூதூர் பிரதேச சபை தவிசாளர் ஏ.எம். ஹரீஸ், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் பி.கே.களீல் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### பிடிபட்டன பீடிகள்

கிண்ணியாவில் பத்து லட்சம் ரூபா பெறுமதியான சட்டவிரோத பீடிக்கட்டுக்களை கிண்ணியாப் பொலீசார் கடந்த செவ்வாய் கிழமை கிண்ணியா ஜாயா வீதியில் உள்ள வீடொன்றிலிருந்து காவல்துறையி-னரால் கைப்பற்றப்பட்டுள்ளது.



இவை மாவனல்ல பிரதேசத்தைச் சேர்ந்ததனியார் கம்பனி ஒன்றின் பெயர் பொறிக்கப்பட்ட பீடிகள் என அறியப்பட்டுள்ளது. இது தொடர்பாக திருகோணமலை காவல்துறைப் பிரிவின் குற்றப் புலனாய்வாளர்கள் விசாரனைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

### இலவச நுளம்பு வலைகள் விநியோகம்

சிவபுரி கிராம சேவகர் பிரிவில் உள்ள சுமார் 600 குடும்பங்களுக்கு இலவச நுளம்பு வலைகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

திருமலைச் செல்வம் ஞாபகர்த்த பொதுநூலக மண்டபத்தில் வைத்திய அதிகாரி தவக்கொடிராஜா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் திருகோணமலை நகரசபைத் தலைவர், மற்றும் நகரசபை உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

### மாணவர்களுக்கு ஈருருளிகள் கையளிப்பு

வெருகல் பிரதேச மாணவர்களுக் "அகம்" உள்ளூர் அரசசார்பற்ற தன்னார்வ நிறுவனம் ஈருருளிகளை வழங்கியுள்ளது. வெருகல் பிரதேச செயலாளர் தனேஸ்வரன் கலந்துகொண்டு ஈருருளிகளை வழங்கி வைத்துள்ளார்.

பாடசாலைகளுக்கு நீண்ட தூரம் செல்லும் மாணவர்களுக்கு ஈருருளிகளை பெற்றுக்கொடுக்கும் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருவதாக அகம் இணைப்பாளர் திலீப்குமார் இதன்போது தெரிவித்தார்.

## அவுஸ்திரேலியாவிற்குச் சிங்களவரும் தப்பியோட்டம்

பலநாள் கடற் பயண றோலர் ஒன்றில் அவுஸ்திரேலியாவிற்குத் தப்பிச்செல்ல முயன்ற 88 இலங்கையர்களை கிழக்கின் கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

மிஸ்மா என்று பெயரிடப்பட்ட இப் படகினை மட்டக்களப்புக் கடலின் கிழக்குப் புறமாக 12.5 கடல் மைல் தூரத்தில் வைத்துக் கடற்படையினர் கைது செய்துள்ளனர். 86 தமிழர்களும் முஸ்லிம் மற்றும் சிங்களவர் ஒருவருமாக மொத்தம் 88 பேர் கைது செய்யப்பட்டு திருகோணமலைத் துறைமுகக் காவல்துறை பணிமனை-யில் கையளிக்கப்பட்டுள்ளனர். இவர்களுள் 56 ஆண்கள், 18 பெண்கள், 14 குழந்தைகளும் உள்ளடங்குகின்றனர்.

திருகோணமலை, மட்டக்-களப்பு, வவுனியா, கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு மற்றும் கொழும்பை வதிவிடமாகக் கொண்ட-வர்களிடம் காவல்துறையினர் விசாரணைகளை முன்னெடுத்த போதே சிங்களவர் ஒருவரும் தப்பியோட முனைந்துள்ளது தெரியவந்தள்ளது.

## குமரக்கடவையில் கொலை

18.06.2013 அன்று குமரக்கடவை பத்மீகம பகுதியில் வசிக்கும் விவசாயி ஒருவர் கொலை செய்யப்பட்ட சம்பவம் இடம் பெற்றுள்ளது. 56 வயது மதிக்கத்தக்க உக்கு பண்டாகே செனவிரத்ன எனும் நபரே இவ்வாறு கொலை செய்யப்பட்டாரென்பதும் தெரிய வருகிறது. குறித்த தினத்தன்று மாலை 4.30 மணியளவில் தனது வயலில் வேலை செய்து கொண்டிருந்த இவர் நீர் பாய்ச்சுதல் தொடர்பான தகராறொன்றில் இனந்தெரியாத நபரொருவரால் மண்வெட்டியால் அடித்துக் கொலை செய்ப்பட்டுள்ளார். இக்கொலைச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் காவல்-துறையினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

## தாதியர் சங்கத்தினர் ஒரு மணிநேர பணிப்புறக்கணிப்பு

திருகோணமலை தள வைத்-தியசாலை அரச தாதியர் சங்கத்தினர் 19.06.213 அன்று தள வைத்தியசாலை முன்பாக பணிப் பகிஷ்கரிப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். ஒரு மணிநேரம் நடைபெற்ற இப்போராட்டம் ஒன்பது அம்சக் கோரிக்கைகளை நிறைவேற்றப்படவேண்டும் எனும் வேண்டுகோளுக்கமைய இடம்பெற்றது. இதன்போது சுகாதார அமைச்சருடனான பேச்சுவார்த்தை இடம்பெற்றதாகவும் கோரிக்கை நிறைவேற்றப்படாவிடின் அடுத்த மாதம் முழுநாள் வேலை நிறுத்தம் செய்யப்படும் என தாதியர் சங்கத்தினர் தெரிவித்ததாகவும் மலைமுரசிற்கு அறியக்கிடைத்தது.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை இளைஞர் பாராளுமன்றம் தெளிவும்.. நோக்கமும்.. – 3

கடந்த வாரம் இலங்கை இளைஞர் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடக்கூடியவர்கள் யார்? என்பது பற்றியும் இத்தேர்தலில் வாக்களிக்கத் தகுதி பெற்றோர் யார்? என்பது பற்றியும் விளங்கினோம். இனி இப் பாராளுமன்றத்திற்கு உறுப்பினர் தெரிவு எவ்வாறு அமைகின்றது என்பது பற்றியும் ஏனைய தெரிவுகளையும் அலசலாம்.

### உறுப்பினர் தெரிவு

இலங்கை சனநாயக சோஷலிச ஒற்றையாட்சிக் குடியரசின் இரண்டாவது இளைஞர் பாராளுமன்றத்துக்கான 412 உறுப்பினர்கள் இலங்கையின் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவுகளிலிருந்தும் பெற்ற வாக்குகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் தெரிவு செய்யப்படுவர். ஒரு பிரதேச செயலாளர் பிரிவிலிருந்து ஒரு பிரதிநிதியே இத் தேர்தலின் மூலம் தெரிவு செய்யப்படுவார். மேலும் செனட்சபை பிரதிநிதிகள் இலங்கை தேசிய இளைஞர் சம்மேளனத்தின் நேர்முகப் பரீட்சையின் மூலம் திறமையின் முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்யப்படுவர். 2013 இடம்பெற்ற தேர்தலில் இலங்கையின் 335 பிரதேச செயலாளர் பிரிவுகளிலிருந்தும் தலா ஒருவர் வீதம் 335 பேரும் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் திறமையின் அடிப்படையில் மொத்தமாக 77 செனட்சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு தெரிவுசெய்யப்பட்ட 412 உறுப்பினர்களுக்கும் மூன்று நாள் பயிற்சிகள், கருத்தரங்குகள் என்பன நடாத்தப்படும். இப் பயிற்சிகளின்போது தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் அறிவு, திறன், சமயோசிதப்புத்தி, நாகரீகம், நேர முகாமைத்துவம், விவேகம் மற்றும் நுண்ணறிவு என்பன நேரடியாகவும், மறைமுகமாகவும் பயிற்சிக் கருத்தரங்கு வளவாளர் குழுவினால் கண்காணித்து மதிப்பிடப்படும். பின்னர் 412 உறுப்பினர்களும் இளைஞர் பாராளுமன்றத்தில் காணப்படும் பதின்மூன்று அமைச்சுக்களுக்கும் அவர்களது விருப்பத் தெரிவின் முன்னுரிமையின் அடிப்படையில் இணைத்துக் கொள்ளப்படுவர்.



இளைஞர் பாராளுமன்றின் பதின்மூன்று அமைச்சுக்களும் வருமாறு...
01 - தேசிய இளைஞர் கொள்கைத் திட்டமிடல், 02 - திட்டமிடல் ஆலோசனை, 03 - சகவாழ்வு, 04 - கல்வி, 05 - தொழில் வழிகாட்டல், 06 - ஊடக மற்றும் தகவல் தொடர்பாடல், 07 - மனிதவள மற்றும் மூலதனவள ஆலோசனை, 08 - கலாசாரம், 09 - சர்வதேச இளைஞர் ஒத்துழைப்பு, 10 - ஆய்வு மற்றும் புத்தாக்கம், 11 - விளையாட்டு, 12 - பிரசைகள் இணைப்பு விவகாரம், 13 - புவியியல் பாதுகாப்பு.

இவ்வாறு பதின்மூன்று அமைச்சுக்களிலும் உள்வாங்கப்பட்ட உறுப்பினர்களுக்கு குறித்த அமைச்சு ரீதியான அறிவூட்டல் கருத்தரங்குகள், பயிற்சிகள் என்பன வழங்கப்படும். இங்கும் உறுப்பினர்களின் அறிவு, திறன், அரசியல்ஞானம் என்பன கருத்திற்கொள்ளப்பட்டு பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் ஒவ்வொரு அமைச்சிலிருந்தும் ஐந்து உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவர். இவர்கள் தங்களுக்குள் திறன், அறிவு, விவேகம், அரசியல் ஞானம் போன்ற வகைகளுள் போட்டியிட்டு புள்ளிகளைப் பெறுவர் இவர்களின் புள்ளியின் அடிப்படையிலேயே பிரதமர், பதில் பிரதமர், சபாநாயகர், எதிர்க்கட்சித் தலைவர், அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், நிழல் அமைச்சர்கள் தெரிவு இடம்பெறும்.

### பிரதமர் தெரிவு

குறித்த பதின்மூன்று அமைச்சுக்களிலும் இருந்து தெரிவு செய்யப்பட்ட ஐவர் அடங்கிய குழுவில் புள்ளிகளின் அடிப்படையில் முதலிடத்தில் உள்ளவர்களில் இருந்து தேர்வுக் குழுவினர் பிரதமரை தெரிவு செய்வர்.

### பதில் பிரதமர்

பிரதமர் தெரிவில் கலந்து கொண்டு இரண்டாவது நிலைக்குத் தள்ளப்பட்ட உறுப்பினர்களில் முலாவது இடத்தில் உள்ள ஒருவர் தேர்வுக்குழுவால் பதில் பிரதமராக நியமிக்கப்படுவார்.

### எதிர்க்கட்சித் தலைவர்

பிரதமர் தெரிவில் கலந்து கொண்டு மூன்றாம் நிலைக்கு தள்ளப்பட்ட உறுப்பினர்களில் முதலாவது இடத்தில் உள்ள ஒருவர் தேர்வுக்குழுவால் எதிர்க்கட்சித் தலைவராக தெரிவு செய்யப்படுவார்.

### சபாநாயகர்

விசேடமாக இடம்பெறும் இத்தெரிவில் சபாநாயகருக்கு மொழியறிவு வேண்டப்படுகின்றது. அதாவது தமிழ், சிங்கள மொழிகளை எழுத, வாசிக்கத் தெரிந்த இருவர் தேர்வுக்குழுவால் தெரிவு செய்யப்பட்டு ஏனைய உறுப்பினர்கள் மத்தியில் பொது வாக்கெடுப்புக்கு விடப்பட்டு அதிலிருந்தே சபாநாயகர் தெரிவு இடம்பெறும்.

### அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள்

தெரிவு செய்யப்பட்ட குழுவில் நான்காவது நிலையில் உள்ள உறுப்பினர்களில் புள்ளிகளின் அடிப்படையில் முதலாமிடத்தில் உள்ளவர்கள் அமைச்சர்களாகவும், அத்தேர்வில் அடுத்த நிலை உறுப்பினர்கள் பிரதி அமைச்சர்களாகவும் தெரியப்படுவர்.

### நிழல் அமைச்சர்கள்

தெரிவு செய்யப்பட்ட குழுவில் இடம்பெறும் ஐந்தாம் நிலை உறுப்பினர்களில் புள்ளிகளின் அடிப்பயையில் முதலிடத்தில் உள்ளவர் நிழல் அமைச்சராக தெரிவு செய்யப்படுவார்.

தில்லைநாதன் பவித்ரன்
மனிதவள மற்றும் மூலதனவளப் பிரதி அமைச்சர்
இலங்கை இளைஞர் பாராளுமன்றம்




# இலங்கை வரலாற்றில் கம்பளைக் கால கலைக்கோயில் "எம்பெக்க"

கொழும்பிலிருந்து கண்டி நகர் நோக்கி நெடுஞ்சாலையில் பிரயாணம் செய்பவர்கள் பிலிமத்தலாவை நகரை அடைந்ததும் "எம்பெக்க" தேவாலயம் என்ற பெயர்ப் பலகையை கண்ணுறுவர். அவ்விடத்திலிருந்து செல்லும்போது 1370 ஆம் ஆண்டைச் சேர்ந்த இலங்கை வரலாற்றில் கம்பளைக் காலம் என்று அழைக்கப்படுவதும் 3 ஆம் விக்கிரமபாகு மன்னனின் ஆட்சிக் காலத்தில் ஏற்படுத்தப்பட்டதுமான "எம்பெக்க" தேவாலயம் காணப்படுகின்றது.

### வரலாற்று ஐதீகம்

இந்த தேவாலயம் உருவானது தொடர்பான கதை சுவாரஸ்யமானது. முன்பு ஒரு காலத்தில் எம்பெக்க கிராமத்துக்கு அருகாமையில் பெர வாத்தியக்காரன் ஒருவன் கடுமையான குஷ்ட்ட ரோகத்தால் அவதியுற்றபோது தன்னை இந்த நோயின் அவலத்திலிருந்து மீட்டெடுக்கும்படி அவன் கதிரமலைக் கந்தனிடம் தவஞ்செய்து நேர்த்திக்கடன் வைத்தான். அதனைத் தொடர்ந்து அவனுக்கு அந்த நோயில் இருந்து சுகம் கிடைத்தது. அதனால் மகிழ்ச்சியடைந்த அவன் வருடந்தோறும் கதிர்காமத்துக்குச் சென்று, பூஜை வழிபாடுகள் செய்து கந்தப் பெருமானை வழிபட்டு வந்தான். எனினும் வயதாக வயதாக தன்னால் கதிர்காமத்துக்குச் சென்று கந்தப் பெருமானை வழிபட முடியுமா? என்ற கவலை அவனை வாட்டியது. ஒரு நாள் இத்தகைய கவலையுடன் அவன் கந்தப் பெருமானை வணங்கி விட்டு கோயிலுக்கருகாமையில் இருந்த கதிர மரத்தடியில் உறங்கிப் போய் விட்டான். அன்றிரவில் அவன் கனவில் வந்த கந்தக் கடவுள் கவலையை விட்டு ஊருக்குப் போகும் படியும், ஊரில் நல்ல தகவல் கிடைக்குமென்றும் அருளிச் சென்றார்.

கந்தப்பெருமானில் நம்பிக்கை கொண்டிருந்த அவன் நிம்மதியுடன் ஊர் திரும்பினான். ஊர் திரும்பியவனுக்கு ஒரு விசித்திரமான செய்தி கிடைத்தது. "எம்பெக்க" என்ற கிராமத்து தச்சன் ஒருவன் கதிர மரம் ஒன்றை தரிசித்தபோது ஐந்தாறு அடி உயரத்துக்கு அதில் இருந்து இரத்தம் சீறிப் பாய்ந்ததாம். உடனே அவ்விடத்துக்குச் சென்ற வாத்தியக்காரன் கதிர்காமக் கந்தன் தனக்கு காட்சியளித்து சொன்ன செய்தியைக் கூற தச்சன் அறுசுவையுடன் உணவு படைத்தான். வாத்தியக்காரன் பெர வாத்தியம் இசைத்து வழிபடத் தொடங்கினான். இன்றும் கூட இங்கு மூன்று வேளை பூசை வழிபாடுகள் உணவுப் படையலுடனும் பெர வாத்திய இசையுடனும் நடைபெறுகின்றது. கோயிலின் பிரதான மண்டபம் விசாலமாகவும் பெர வாத்தியம் இசைக்கவும் ஆடிப்பாடவும் ஏற்ற விதத்தில் வசதியாக அமைக்கப்பட்டுள்ளது.

### வரலாறு

கி.பி. 1370 ஆம் ஆண்டு கம்பளை இராச்சியத்தை 3 ஆம் விக்கிரமபாகு மன்னன் ஆட்சி செய்தபோது மேற்படி எம்பெக்க என்ற இடத்தில் இவ்விதம் கதிர்காமக் கந்தனுக்கு வழிபாடு இடம்பெற்று வருவதைக் கண்ணுற்று அங்கு ஒரு தேவாலயத்தை அமைக்க நன்கொடையும் உதவி, உபகாரங்களும் செய்துள்ளான்.



பின்னர் இத்தேவாலயத்தைக் கண்டு களிக்க மன்னன் தனது பல்லக்கில் ஏறி அவ்விடத்துக்கு விஜயம் மேற்கொண்டான். எனினும் அவன் திரும்பிச் செல்ல முற்பட்டபோது பல்லக்கு ஒரு பக்கம் ஒடிந்து சாய்ந்து கொண்டதால் தொடர்ந்து செல்ல முடியவில்லை. இதனை வெறுமனே சாதாரண நிகழ்வாகக் கருதாத மன்னன் யானைத் தந்தங்களுடனும், வெள்ளிப் பூச்சுக்களுடனும் கூடிய அந்த விலையுயர்ந்த பல்லக்கினை மேற்படி தேவாலயத்துக்கே அன்பளிப்புச் செய்தான். இப்பல்லக்கு இன்றுவரையும் அரும்பொருளாக இருந்து வந்துள்ளதுடன் இன்று இக்கோயிலின் அரும்பொருட் காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது.

அதன் பின்னரும் அரசன் தனது பட்டத்து ராஜ குஞ்சரங்களின் தந்தங்களை இக்கோயிலுக்கு வழங்கியதுடன் தேவாலயத்தின் பணிகளுக்கென 67 பேரை நியமித்தான். இன்றும் இக்கோயிலின் நிர்வாகத்தை அரத்தன பணிக்கி என்ற பெர வாத்தியக்கார வம்சத்தினரே கவனித்து வருகின்றனர். இக்கோவிலின் பூந்தோட்டத்தினை கவனித்துக் கொண்டிருப்பவர்கள். "கங்காணி வீட்டு" (கங்காணிகெதர) பரம்பரையினர் ஆகும். பிரதான நிர்வாகிகளாக விதானை ஒருவரும், வண்ணக்குரால என்பவரும் நிலமேயால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

### கம்பளை வரலாற்றுக் காலம்

இலங்கை வரலாற்றாசிரியர்கள் இலங்கை வரலாற்றின் கம்பளைக் காலத்துக்கு அதிக முக்கியத்துவம் வழங்குவதில்லை என்றாலும் இக்காலத்தில் இடம்பெற்ற பல நிகழ்வுகள் இப்போதும் பொன்னெழுத்துகளால் பொறிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக இலங்கையின் கலை இலக்கிய வளர்ச்சி தொடர்பான சிறப்புகள் இக்காலத்தில் பதியப்பட்டுள்ளன.

*(இன்னும் நடுவோம்)*

செந்தூரன்

**சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்போம்**
**குற்றங்கள் நிகழும் பொழுதில் அழையுங்கள் தொலைபேசி எண்**
**1929**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலைமுரசின் உலக வலம்

## சந்திரனில் 280 எரிமலைகள்: ஆய்வில் தகவல்

ஆஸ்திரேலியாவில் உள்ள கர்டின் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் சந்திரன் குறித்த பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்ட போது சந்திரனின் மேற்பரப்பில் 66 எரிமலைகள் இருப்பதற்கான வாய்ப்பு தென்படுவது தெரிந்தது.

அத்துடன் கண்ணுக்கு தெரியாமல் 280 எரிமலைகள் அங்கு மறைந்து கிடப்பது கண்டுபிடிக்கப்பட்டதோடு அவை அனைத்தும் சந்திரனின் மேற்பரப்பில் ஈரமற்ற நிலையில் இறுகி கிடக்கின்றன எனவும், இந்த தகவலை ஆய்வு மேற்கொண்டுள்ள பேராசிரியர் "வில்பெதர்ஸ்டோன்" தலைமையிலான விஞ்ஞானிகள் குழுவினர் அறிவித்துள்ளனர்.

இதற்கிடையே, அமெரிக்காவின் நாசா ஆய்வு மையம் விண்வெளிக்கு செல்ல நான்கு பெண்கள் உட்பட எட்டு வீரர்களை தேர்வு செய்துள்ளது.

செவ்வாய் உள்ளிட்ட கிரகங்களுக்கு ஆட்களை அனுப்பி ஆய்வு மேற்கொள்ள அமெரிக்கா திட்டமிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## தன்னைச் சிதைத்த தந்தையின் தலையைக் கொய்த மகள்

தன்னைப் பாலியல் வன்புணர்வுக்குள்ளாக்கிய தகப்பனின் தலையைக் கொய்துள்ளார் மகள்.

இச் சம்பவம் பப்புவா நியூகினியாவில் நடந்துள்ளது. பருவவயதிலுள்ள இப் பெண் புல்லுவெட்டும் கத்தியைக் கொண்டே தகப்பனின் தலையைக் கொய்துள்ளார்.

அச் சமூகத்தின் தலைவர்கள் அப் பெண்ணுக்கு ஆதரவாகக் குரலெழுப்பியுள்ளனர். மனைவியும் ஏனைய மூன்று உடன் பிறப்புக்களும் உறவினரின் வீட்டிற்குச் சென்றிருந்த இரவொன்றில் பலதடவை வன்புணர்வுக்குள்ளான இப் பெண் மகள் காலையில் தனது தகப்பனின் தலையைக் கொய்தெறிந்துள்ளார். 40 வயதுகளை அடைந்துகொண்டிருந்த இத் தகப்பனின் பேய்த்தனமான நடவடிக்கையால் மனப் பேதலிப்புக்குள்ளான பெண்ணே கொலையைப் புரிந்ததாக வாக்குமூலமளித்துள்ளார்.

பப்புவா நியூகினியாவில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் சமூகத்திலும் வீடுகளிலும் அதிகரித்து வருவதாக அங்கியங்கும் தன்னார்வத் தொண்டகம் ஒன்று தெரிவித்துள்ளது.

## பேச்சுவார்த்தைக்கு அமெரிக்கா இணக்கம்

வடகொரியா விடுத்துள்ள உயர்மட்ட பேச்சுவார்த்தை தொடர்பான அழைப்பிற்கு அமெரிக்கா அமைதியான முறையில் பதில் வழங்கியுள்ளது.

வார்த்தைகளை அல்லாமல் செயற்பாடுகளை வைத்தே வடகொரியா தொடர்பாக தீர்மானிக்கப்படும் என அமெரிக்க பேச்சாளர் ஒருவர் கூறியுள்ளார்.

பிராந்திய அமைதியைப் பேணுவதற்காக அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தை நடத்த தாம் தயார் என வடகொரியா நேற்றைய தினம் அறிவித்திருந்தது. எனினும் பேச்சுவார்த்தைக்கான இடம் மற்றும் நேரத்தை அமெரிக்க தீர்மானிக்க முடியும் என்ற போதிலும், முன்நிபந்தனை எதுவும் விதிக்கக் கூடாதென வடகொரியா வலியுறுத்தியிருந்தது.

தென்கொரியாவுடன் கடந்த வாரம் நடத்த திட்டமிடப்பட்ட பேச்சுவார்த்தையை வடகொரியா இரத்து செய்திருந்தது. இந்தப் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளவிருந்த தலைமை பிரதிநிதியை மாற்றியதன் மூலம் தென்கொரியா இதற்கு தடையை ஏற்படுத்தியதாக வடகொரியா குற்றஞ்சாட்டியிருந்தது.

## வெளிநாட்டு தலைவர்களை பிரிட்டன் ரகசியமாக உளவு பார்த்தது

ஜி20 மாநாட்டிற்கு வந்த தலைவர்களின் செயல்பாடுகளை பிரிட்டன் உளவுத்துறை ரகசியமாக கண்காணித்துள்ளது தற்போது தெரியவந்துள்ளது.

அமெரிக்காவின் ரகசிய உளவு வேலைகள் குறித்த தகவல்களை வெளியிட்ட அமெரிக்க உளவு அமைப்பான சிஐஏவின் முன்னாள் பணியாளர் எட்வர்ட் ஸ்னோடென் இத்தகவலையும் தெரிவித்துள்ளார்.

2008ம் ஆண்டில் ஏற்பட்ட சர்வதேச பொருளாதார நெருக்கடி தொடர்பாக விவாதித்து முக்கிய முடிவுகள் எடுப்பதற்காக 2009ம் ஆண்டு ஏப்ரல், செப்டம்பர் மாதங்களில் லண்டனில் ஜி20 நாடுகளின் மாநாடு நடைபெற்றது. மாநாட்டுக்கு வரும் வெளிநாட்டுப் பிரதிநிதிகள் பயன்படுத்துவதற்காக சிறப்பு இன்டர்நெட் மையங்களை பிரிட்டன் உளவுத் துறை அமைத்துள்ளது. மேலும் மாநாட்டில் பங்கேற்றுள்ள தலைவர்கள், யார் யாருடன் என்ன பேசுகிறார்கள் என்பதை கண்காணிக்க 45 பேர் கொண்ட குழுவை பிரிட்டன் உளவுத் துறை நியமித்துள்ளது.

துருக்கி நிதியமைச்சர் மெஹ்மத் சிம்செக், தென்னாப்பிரிக்க தலைவர்கள் உட்பட 15 பேரது செயல்பாடுகள் தீவிரமாக கண்காணிக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் வெளிநாட்டு தலைவர்களின் தொலைபேசி உரையாடல்கள், அவர்கள் தங்கள் நாட்டுடன் பரிமாறிக் கொண்ட மின்னஞ்சல்கள் மற்றும் மடிக்கணனிகளில் உள்ள தகவல்களை ரகசியமாக பதிவு செய்துள்ளது தற்போது தெரியவந்துள்ளது.

## யூரி காகரின் இறந்தது எப்படி? 45 ஆண்டுகளுக்கு பின் உண்மை



உலகின் முதல் விண்வெளி வீரரான யூரி காகரின் எப்படி பலியானார் என்பது குறித்து 45 ஆண்டுகளுக்கு பிறகு தற்போது தெரியவந்துள்ளது. ரஷ்யாவை சேர்ந்த யூரி காகரின் கடந்த 1965ஆம் ஆண்டில் விண்ணுக்கு சென்று சாதனை படைத்தார். இந்நிலையில் 1968ஆம் ஆண்டு காகரின் சென்று கொண்டிருந்த விமானம் விபத்துக்குள்ளானதில், அவர் பலியானார். இதனையடுத்து விசாரணையில், பலூன் அல்லது பறவை மீது மோதிவிடக் கூடாது என்பதற்காக விமானத்தைத் திருப்பிய போது விபத்து நேர்ந்ததாக அரசு கூறியிருந்தது. ஆனால் 45 ஆண்டுகளுக்கு பின் யூரி காகரினுடன் பணியாற்றி வந்த அலெக்ஸி லியோனோவ் என்பவர் "யூரி காகரின் விமானத்தில் சென்ற போது மர்ம விமானம் ஒன்று குறுக்கே பறந்து சென்றதால், விபத்து ஏற்பட்டதாக தெரிவித்துள்ளார். இத்தகவல் மக்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

## ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சைக்கான பயிற்சிகள் – 20

பிரதீபா

1. இலங்கைக்கு மட்டுமே உரித்தான பறவை எது?
   1. காட்டுச்சேவல் 2. கொக்கு 3. கிளி
2. எதிரி வாலைப்பிடிக்க முயலும் போது தனது வாலைப் பிய்த்துக் கொண்டு செல்லக் கூடியது எது?
   1. உடும்பு 2. ஓணான் 3. பல்லி
3. எதிரிகளைக் கண்டவுடன் உடலை வளையம் போல சுருட்டிக் கொள்ளும் பிராணி எது? 1. நத்தை 2. மரவட்டை 3. மண்புழு
4. பகல் வேளையில் நடமாடும் பிராணி எது?
   1. வீட்டு ஈ 2. வௌவால் 3. கரப்பான் பூச்சி
5. தாய் நாய் குட்டியை வாயால் தூக்கிச் செல்ல கௌவுவது குட்டியின் எவ்விடத்தை?
   1. கழுத்துப் பகுதியை 2. வயிற்றுப் பகுதியை 3. காதுகளை
6. பின்வரும் பிராணிகளில் ஊர்வன (நகருயிரி) எது?
   1. தவளை 2. மயில் 3. ஆமை
7. முட்டைகளை அடைகாத்து குஞ்சு பொரிக்காத பிராணி எது?
   1. தேன்சிட்டு 2. முதலை 3. பருந்து
8. தான் வாழும் சூழலின் நிறத்திற்கு ஏற்ப உடலின் நிறத்தை மாற்றும் பிராணி எது? 1. பச்சோந்தி 2. ஓணான் 3. பச்சிலைப்பூச்சி
9. எதிரிகள் துரத்திச் செல்லும் போது தப்பிச் செல்ல துர்மணத்தை வெளிவிடும் பிராணி எது?
   1. ஆந்தை 2. நரி 3. கணவாய்
10. அணில் மரத்துக்கு மரம் தாவும் போது உடலின் சமநிலையைப் பேணுவது எது? 1. வால் 2. கால்கள் 3. மீசை

பின்வரும் கருத்தைக் கவனத்தில் கொண்டு 11, 12ம் வினாக்களுக்கு விடையளிக்குக.

மரங் கொடியினைத் தழுவி வரும் தென்றல் காற்று சுகம் தரும்
உரமான எம் உடல் உளத்திற்கு புத்துணர்வையும் தரும் - இந்த
உண்மையை உணர்ந்து மரங் கொடிதனை எம்முயிர் போல் காக்கும்
கடமையினைச் செய்வதே உன்னத செயலாம்

7. எமது உடலிற்கும் உள்ளத்திற்கும் புத்துணர்வைத் தருவது எது?
   1. மரங்கொடி 2. தென்றல் காற்று 3. உன்னத செயலைச் செய்தல்
8. இக்கவிதை பிரதானமாக எமக்குக் கூறுவது யாது?
   1. உடல் உளத்திற்கு புத்துணர்வு தரும் தென்றல் காற்று பற்றி
   2. மரங் கொடியைத் தென்றல் காற்று தழுவி வருவது பற்றி
   3. சூழலில் மரங் கொடியைப் பாதுகாக்க வேண்டிய அவசியம் பற்றி
9. வெற்றிடத்தை நிரப்புக.
   நல்ல பிள்ளைகள் ஆசிரியரின் வார்த்தைகளைச் செவிமடுக்கின்றனர். பிரசித்தி பெற்ற பாடகர் இனிமையான குரலில் பாட்டுப் பாடினார்.
   பிள்ளைகள் : பாடகர் எனின் செவிமடுக்கின்றனர் : ........................
   1. குரலில் 2. பாட்டு 3. பாடினார்
10. இலங்கையில் பால் உற்பத்திக்குப் பங்களிப்புச் செய்யும் நிறுவனம் எது?
    1. விவசாயத் திணைக்களம் 2. கால்நடைவளங்கள் அமைச்சு
    3. கமநல சேவைகள் திணைக்களம்
11. இலங்கைக்கு மேற்கே அமைந்திருப்பது
    1. ஆபிரிக்க நாடுகள் 2. தெற்காசிய நாடுகள்
    3. ஐரோப்பிய நாடுகள்
12. நெற் பயிரைச் சேதமாக்குவது
    1. மீலிமூட்டைப் பூச்சி 2. அழுக்கணவன் 3. தண்டுகோதி
13. ஊதா நிறத்தைப் பெற்றுக் கொளவதற்குச் சேர்க்க வேண்டிய வர்ணங்கள் எவை?
    1. மஞ்சள், சிவப்பு 2. மஞ்சள், பச்சை 3. நீலம் சிவப்பு
14. வெற்றிடத்தை நிரப்புக.

| 1 | 3 | 2 |
|---|---|---|

| 3 | 5 | 4 |
|---|---|---|

| 5 | 7 | 6 |
|---|---|---|

..................................

1.

| 7 | 9 | 8 |
|---|---|---|

2.

| 6 | 5 | 8 |
|---|---|---|

3.

| 7 | 7 | 8 |
|---|---|---|

15. ஒரு வரிசையில் 20 மாணவர்கள் வீற்றிருந்தனர். அதில் ஒரு மாணவன் முன் பக்கமிருந்து எண்ணிச் செல்லும் போது 11வதாக இருந்தான். எனின், அம்மாணவன் பின்பக்கமிருந்து எண்ணி வரும் பொழுது எத்தனையாவதாக இருப்பான்? 1. 11வதாக 2. 10வதாக 3. 9வதாக
16. 1,2,3,4,5 ஆகியவற்றுக்கு முறையே S, F, C, D, E என்னும் எழுத்துக்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இதற்கேற்ப
    CSF + FCS = .............
    1. EDC 2. CSF 3. FCS
17. 1மீ துணியின் விலை ரூ 205 எனின், 1மீ 55செ.மீ துணியின் விலை என்ன? 1. ரூ 317.75 2. ரூ 307.50 3. ரூ 318

பெயர்: ......................................................................
......................................................................
முகவரி: ......................................................................
......................................................................
......................................................................
பாடசாலை: ......................................................................

## தரம் ஐந்து மாணவர்களுக்கான புலமைப் பரிசிற் போட்டி

மேலுள்ள கேள்விகளுக்கான சரியான விடைகளை குறித்து அனுப்பி வாராந்தம் பரிசில்களை வெல்லுங்கள்.

மேலுள்ள கேள்விப் பகுதியை நிரப்பி வெட்டி அதனை மலைமுரசு, இல 159 A, கடல் முக வீதி திருக்கோணமலை என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். வாராந்தம் பரிசுகளை வெல்லுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியச் சிற்றரசுகளை நோக்கி நகரும் இலங்கை

மாயன்

இலங்கையின் பொருளாதார வானத்தில் ஆசிய மேகங்கள் சூழத் தொடங்கியுள்ளன. ஆசிய நாடுகள் பல நேரடி முதலீடுகளை இலங்கையில் மேற்கொள்ளும் வாய்ப்புக்கள் தற்பொது அதிகரிக்கப்பட்டுள்ளது.

சீனாவும் இந்தியாவுமே தமது ஆதிக்கப் போட்டிக்காக இலங்கையில் முதலீடு செய்யும் குறிக்கோளுடன் இயங்கிவந்த காலம் போய் தற்போது ஆசிய மற்றும் கிழக்காசிய நாடுகள் பலவும் தமது நேரடி முதலீடுகளை இலங்கையுட் பாய்ச்ச விரும்புகின்றன.

அவ்வாறு உட்பாய்ச்சப்படும் நிதியினைக் கொண்டு மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சுமார் 80 வீதத்திற்கு அதிகரித்துள்ள கடனுக்கான வட்டியைப் பலகாலங்களுக்குச் செலுத்த அரச கனவு காண்கின்றது போலத் தெரிகின்றது.

ஆரம்பத்தில் கொழும்பில் காலிமுகத்திடலுக்கு முன் அமைந்திருந்த இராணுவத் தலைமையகக் கட்டடக் காணியினை கொங்கொங் நிறுவனமும், சீன நிறுவனமும் தம்மிடையே பங்கு போட்டுக் கொண்டன. 20 ஏக்கர் நிலப்பரப்புள்ள இக் காணியினை இவை பங்குபோட்டுக் கொள்ளும் போது இவ்விரு நாடுகளுடன் இலங்கை அரசு செய்து கொண்ட பொருளாதார உடன்படிக்கைகளில் பாரிய வேறுபாடு இருந்தது.

சாங்கிரி-லா என்ற உல்லாசப் பயணத்துறையின் பலம் மிக்க நிறுவனங்களில் ஒன்றான கொங்கொங் நாட்டு நிறுவனத்திற்கு காலிமுகத்திடலின் 10 ஏக்கர் காணி முற்று முழுதாக விற்கப்பட்டது. 125 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு விலைபோன இக்காணி வியாபாரம் வெளித் தெரியத் தொடங்கியவுடன் எதிர்க்கட்சிகள் உட்பட பொருளாதார நிபுணர்கள் பலர் இவ் விற்பனைக்கு எதிராகக் குரலெழுப்பத் தொடங்கினர்.

அவ்விற்பனையை நியாயப் படுத்த முடியாத இலங்கை அரசு வெளி நாட்டவர்களுக்கு காணி விற்பனை செய்வதைத் தடுக்கும் சட்ட மூலமொன்றை நிறைவேற்றியதன் ஊடாக அனைத்து விமர்சனங்களுக்கும் முற்றுப்புள்ளியிட்டது. எனினும் விற்றது விற்றதாகவே போய்விட்டது.

புதிய சட்டமூலத்தால் எஞ்சிய 10 ஏக்கர் நிலத்தைக் கொள்வனவு செய்யும் திட்டத்துடன் அரம்பக்கட்டக் கொடுப்பனவாக 54.4 மில்லியன் அமெரிக்க டொலர்களை இலங்கைக்கு வழங்கியிருந்த சீனாவின் சீன தேசிய வான் தொழில்நுட்ப இறக்குமதி ஏற்றுமதிக் கூட்டுத்தாபனம் நிலத்தைக் கொள்வனவு செய்யும் உரிமையை இழந்தது.

அதே நேரத்தில் சீனாவிற்கு நிலத்தை விற்பதற்கு அரசு எடுத்திருந்த முயற்சியினை அறிந்திருந்த இந்தியா தனது இராச தந்திர நகர்வுகள் ஊடாக காலி வீதியையும் டுப்ளிசேகன் வீதியையும் இணைக்கும் காணித் துண்டொன்றை தனதாக்கிக்கொள்ள முயற்சித்திருந்தது.

காணியைச் சொந்தமாக பெற்றுக்கொள்ளும் சீன மற்றும் இந்திய முயற்சிகள் இரண்டும் புதிய சட்டமூலத்தால் இழுபறி நிலைக்குள்ளாகின.

இதைத் தொடர்ந்து அக் காணித்துண்டுகள் இரண்டையும் நீண்டகால குத்தகைக்கு மட்டுமே வழங்க முடியும் என நகர அபிவிருத்தி அமைச்சு இரு நாட்டினதும் நிறுவனங்களுக்கு அறியத்தந்திருந்தது. இந்திய நிறுவனம் இம் முடிவை ஏற்றுக்கொண்டதாயினும் சீன நிறுவனம் இம்முடிவை ஏற்றுக்கொள்ள மறுத்ததால் தற்போது அந் நிறுவனத்தால் வழங்கப்பட்ட முற்பணத் தொகையை மீளச் செலுத்த வேண்டிய நிலைக்கு இலங்கைத் திறைசேரி தள்ளப் பட்டுள்ளது.

இந் நேர் முதலீடுகளை அரசு பரவலாக்கி வருவது அதனது சர்வதேசத் தந்திரோபாயத்தின் முக்கிய நகர்வாகவே கொள்ளவேண்டியுள்ளது.

தாய்லாந்து நாட்டின் தகரத்திலடைத்த மீன் உற்பத்தி நிறுவனத்தை இலங்கையில் திறப்பது, சம்பூரில் சிங்கப்பூரின் பாரிய முதலீடுகளை அனுமதிப்பது, கட்டார் நிறுவனங்களை உல்லாசப் பயண முதலீடுகளை மேற்கொள்ள அனுமதிப்பது, உலகப் புகழ் பெற்ற பன்யான் குறூப், அக்கோர் ஹோட்டல் செராட்டன் பிராண்ட், மாரியொட் இன்டர்நெசனல் என நேர் முதலீட்டாளர்களின் பட்டியல் நீண்டு கொண்டே போகின்றன.

பல்வேறு நாடுகளினதும் நேரடி முதலீடுகளை இலங்கைக்குள் வரவைப்பதால் இரண்டு ந்னமைகளை அடையும் எதிர்பார்ப்பில் இலங்கை இருக்கலாம். முதலாவதாக அந் நாடுகளைத் தனது நண்பர்கள் பட்டியலுக்குள் நிரந்தரமாகத் தக்கவைத்துக் கொள்ளலாம். அதனால் சர்வதேச ரீதியாக இலங்கை எதிர்கொள்ளும் அழுத்தங்களை கையாள பலநாட்டு உதவிகள் பெரும் வரப்பிரசாதமாக இலங்கைக்கு அமையலாம்.

இங்கு கேள்விக்குரிய விடயம் நேரடி முதலீட்டினை வியாபார நிறுவனங்களே மேற்கொள்கின்றன. அவ்வாறு வர்த்தக நிறுவனங்களுடன் இலங்கை செய்துகொள்ளும் ஒப்பந்தமானது அந் நிறுவனம் இயங்குகின்ற நாட்டின் வெளிவிவகாரக் கொள்கையில் எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதே.

அரசுகளை உருவாக்கும் வலுக் கொண்டவையாக பொருளாதாரம் எப்போது மாற்றம் கண்டதோ அன்றிலிருந்தே பொருளாதார வலுவுடைய நிறுவனங்கள் அரசுகளின் வெளிவிவகாரக் கொள்கைகளில் கடும் தாக்கத்தைச் செலுத்தும் வன்மையைக் கொண்டமைந்து விட்டன.

எனவே அவ்வகை வலுக்கொண்ட நிறுவனங்களின் முதலீட்டைத் தாராளமாக இலங்கைக்குள் நுழையவிட்டால் அந்நாடுகளின் அரசியலில் இலங்கையும் தனது சாதகத் தன்மையைப் பேணக் கூடியதாக இருக்கும் என்பது முதலாவது முக்கிய விடயம் ஆகும்.

இரண்டாவது முக்கிய விடயம் யாதெனில் இலங்கை யாதாயினும் ஒரு ஆசிய வல்லரசின் ஏகபோக ஆட்சிக்கு தலையாட்டும் விதமாக விழுந்து விடாமல் இருக்க வேண்டும் என்பது ஆகும். 90களுக்கும் அதற்கு முற்பட்ட காலப்பகுதிகளிலும் இந்தியா இலங்கை மீது கொண்டிருந்த ஏகபோக செல்வாக்கு இப்போது இந்தியாவிற்கு இல்லை. அவ்வாறு இந்திய ஏகபோக உரிமைக்குள் இலங்கை இருந்தபோது இலங்கை மீது இந்தியா திணித்த தீர்வுப் பொதியாகவே 13ம் திருத்தச் சட்டம் காணப்படுகின்றது. அதனை விடவும் இலங்கையின் அனுமதியின்றி இலங்கையின் வான் பரப்பில் இந்திய மிராஜ் விமானங்கள் அப்போது அச்சமூட்டும் தொனியில் யாழப்பாணத்தின் மீது உணவுப் பொதிகளை மக்களுக்கு வீசியது.

இதனைப் போல பலவழிகளிலும் இந்தியா இலங்கைமீது தன்னாதிக் கத்தைக் கொண்டிருந்தது. ஆனால் தற்போது இலங்கையைத் தனது பிடிக்குள் கொண்டுவர சீனா முயலுகின்றது.

போர் முடியும்வரை சீனாவின் செல்லக் குழந்தையாய் இருந்த இலங்கைக்கு தற்போதும் அவ்வாறு இருப்பது அவ்வளவு நல்லதாகப் படவில்லை. எனவே அனைத்து நாடுகளினதும் முதலீடுகளைப் பெருக்கிக் கொண்டால் தனியுரிமையிலிருந்து பல்லுரிமை நாடாக இலங்கை சர்வதேச அரங்கில் மாறிவிடும் என்பதே அதன் எதிர்பார்ப்பாக உள்ளது. அதற்கமைய வெளிநாட்டு நாணயப் பரிவர்த்தனையில் என்றுமில்லாத அளவிற்கு தளர்வுப் போக்கை இலங்கை தற்போது முன் மொழிந்துள்ளதும் இதற்கான காரணங்களில் ஒன்றாகும்.

எனினும் உடனடியாகச் சீனாவைப் பகைத்துக் கொள்ளும் நிலையில் இலங்கை இல்லை. அதனை உறுதிப்படுத்தும் முகமாக இலங்கை தனது கடல் வளத்தைச் சீனாவிற்கு தாரை வார்த்துள்ளது. அதாவது இலங்கையின் கடல் எல்லைக்குள் சீன மீன்பிடிப்படகுகள் இலங்கைக் கொடியுடன் மீன்பிடியில் ஈடுபடப் போகின்றன்.

இந் நடவடிக்கையின் ஊடாக இந்து சமுத்திரப் பகுதியில் இந்திய நடவடிக்கைகளை இலகுவாக சீனா புலனாய்வு செய்யும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுவிட்டன. இச் செயற்பாட்டால் சீனாவின் துணையுடன் இந்தியாவிற்கு ஒரு குட்டை கொடுத்துள்ளது இலங்கை. இக் குட்டுக்கான காரணம் மிகத் தெளிவாக பாதுகாப்புச் செயலரின் அண்மைய பேட:டியில் தெரிய வந்தது.
“ ஜெனீவாவில் இந்தியா எம்மை மிகப் பலவீனப்படுத்திவிட்டது” என அவர் ஆங்கில நாளிதழுக்கான செவ்வி யொன்றில் தெரிவித்திருந்தார். ஜெனீவாவில் இலங்கைக்கு எதிராக இந்தியா வாக்களித்ததை அவ்வளவு சுலபமாக இலங்கை மன்னித்து விடுவதாக இல்லை.

அதற்காக சீனாவிடம் மட்டும் விழுந்து கிடக்கவும் இலங்கை தயாரில்லை. சீனாவை ஓர் ஆபாத் பாண்டவனாக இலங்கை முழுவதுமாக நம்பிக் கொண்டிருந்த போது ஜெனீவாவில் இலங்கைக்கு எதிராக எழுந்த பிரேரணையை தோல்வி யடையச் செய்வதற்கு சீனா கடும் முயற்சியை மேற்கொண்டது. எனினும் அம்முயற்சி தோற்றுப் போனதிலிருந்து இலங்கை அப்பாடத்தைக் கற்றுக் கொண்டது. அதாவது பொருளாதார, பாதுகாப்பு நலன்களைத் தவிர்த்து இலங்கைக்கு சீனா எவ்விதத்திலும் உதவப் போவதில்லை என்பதே. எனவே சீனாவையும், இந்தியாவையும் தாண்டி பல நாடுகளின் உறவைப் பலப்படுத்திக்கொண்டால் மட்டுமே இலங்கைத் தேசத்தின் சர்வதேச ஆட்டம் சரியாகப் பயணப்படும்.

ஆசியச் சிற்றரசுகளைக் குறிவைக்கும் இலங்கையின் தந்திரோபாயப் பொருளாதார நகர்வுகளை ஆசிய வல்லரசுகள் இரண்டும் எவ்வாறு தமக்குச் சாதகாமாக்கப் போகின்றன என்பது அவ் வல்லரசுகளின் வெளிவிவகாரக் கொள்கையிலேயே தங்கியுள்ளன.

ஆனால் தமிழருக்கு இதனால் எவ்வித நன்மைகளும் கிடைக்காது என்பது தான் உண்மை. நாம் மீண்டும் மீண்டும் இந்தியாவிற்குப் பறக்க வேண்டியே இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவியில் உறவாடி...

## இரத்தக் கதை

இறுதியாக
இரத்தத்தின் கதையை
எழுதுகிறேன்

இன்றைய நாளில்
இரத்தம் என்பதற்குரிய அர்த்தம்
என்னவென்பது
உனக்கு புரியாமல் இருக்கலாம்
அல்லது
உன் வாழ்நாளில் நீ
இரத்தத்தை காணாமலேயே
இருந்திருக்கவும் கூடும்

ஆனால்
சற்று முன்னர் கூட நான்
கண்டேன்
எனது உனது மற்றும்
எல்லோரதும்
இரத்தத்தையும் அதை உறிஞ்சி
உறிஞ்சி குடிக்கும்
ஒரு பயங்கர ராட்சசப்
பறவையையும்

அதன் வார்த்தைகள் சிவப்பாக
இருந்தன
அதன் வாயும் சிவப்பாக
இருந்தது
எனது உனது மற்றும்
எல்லோரதும்
இரத்தத்தைப் போலவே

*பெரிய ஐங்கரன்*

## முலைகளுடன் அழுபவள்

பற்றத்தை
மீண்டும் அணியக்
கற்றுக்கொள்கின்றன இரவுகள்

யாரோ ஒருவன்
எனது வீட்டில் வந்து குதிப்பான்
என்ற ஏக்கத்திலேயே
தூக்கத்தைத் தொலைக்கின்றன
விழிகள்

சருகுகள் உருள்வதை
நாய் நடப்பதை
பூனை மரத்துக்குப் பாய்வதை
அணிலின் கூடு விழுவதை
காதுகள் கூர்மையாக்கி
கூர்மையாக்கி
இதயம் பெரும்பள்ளத்தாக்கில்
விழுந்து தேம்புகிறது

எப்போதுமே தாமதமாகிவரும்
அண்ணன்
என்னைக் காக்கும் காவலனாய்
இப்போது விறைத்து நிற்கிறான்

தொலைக்காட்சி முடுக்கி
தன்னைத் தொலைக்கும் அம்மா
என்னையே அச்சம் ததும்பும்
விழிகளுடன்
உற்றுப்பார் பார்த்துக்
கொண்டிருக்கிறாள்

எனது மார்புக் குவட்டில்
சாரைப் பாம்பாய்
வியர்வை ஊர்கிறது
அடிவயிற்றில் திருமால்
திரும்பிப் படுக்கிறான்

நான் ஏமாற்றியவனில்
எவனொருவன்
பிளேட்டுடன் வருகிறானோ என்று
தெரியாமல்
என் முலைகள் இரண்டும்
குலுங்கி அழுகின்றன

*த. அஜந்தகுமார்*

## புதிய முதல்வர்?..

அமர்வுகளுக்குச் சமூகமளிக்கப்போவதில்லை என்றும் அவர்கள் ஊடக அறிக்கைகளை விட்டிருந்தனர். இதனால் கடந்த 18ம் திகதி நடைபெறவேண்டியிருந்த மாகாண சபையின் மாதாந்த அமர்வுகள் நடைபெறுமா? என்ற கேள்வி எழுந்திருந்த நிலையில் 15ம் திகதி ஆளுங்கட்சியின் மாகாண சபை உறுப்பினர்கள் அனைவரும் விசேட கூட்டமொன்றுக்காக கொழும்பிற்கு அழைக்கப்பட்டனர். அத்திகதியில் சனாதிபதி கொழும்பில் இல்லாததால் அவரின் பணிப்புரைக்கமையச் சிரேட்ட அமைச்சர்களான மைத்திரிபால சிறிசேனவையும், சுசில் பிறேம ஜெயந்தவையும் இக்குழு சந்தித்து மணிகணக்கில் உரையாடியுள்ளது.

அவ்வுரையாடலின் முடிவில் மாகாணசபைக்கு முஸ்லிம் காங்கிரஸ் கட்சியிலிருந்து புதியதொரு முதலமைச்சரை நியமிப்பது என்ற இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது என ஊடகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

எனினும் அவ்வுடன்பாட்டுக்கு அமையப் பதினெட்டாம் திகதிய மாகாண சபையின் அமர்விற்கு ஆளுங்கட்சியின் மூவரைத் தவிர எவரும் சமூகமளிக்கவில்லை என்பதால் இவ்வுடன்பாடு தொடர்பாகச் சந்தேகம் தோன்றியுள்ளது.

முதலமைச்சர், சபைத்தலைவி, மற்றும் ஜெயந்த விஜேசேகர ஆகியோரே ஆளுங்கட்சிக் கூட்டணியின் சார்பில் கலந்துகொண்டிருந்தனர்.

அன்றைய தினம் மாலைவரை மாகாண சபை இடையூறின்றி நிகழ்ந்ததாகவும் எதிர்கட்சிகளால் பல பிரேரணைகள் முன்வைக்கப் பட்டதாகவும் தெரியவந்துள்ளது.

### கறுப்புப் பட்டி

அன்றைய மாகாணசபையின் அமர்வுகளுக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்தவர்கள் கறுப்பட்டியுடன் சமூகமளித்திருந்தனர்.

அதற்கான காரணத்தை எதிர்கட்சித் தலைவரிடம் வினவியபோது 13ம் திருத்தச் சட்டத்தில் மாற்றங்களை ஏற்படுத்தி அச் சட்டத்தைப் பலவீனமாக்கும் அரசின் நடவடிக்கைக்கு எதிராகவே தாம் அவ்வாறு கறுப்புப்பட்டி அணிந்து வந்திருந்ததாக எதிர்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

சபையைப் புறக்கணிக்கும் ஆளுங்கட்சிக்கு ஆதரவாகத் தாம் கறுப்புப் பட்டி அணிந்து சென்றதாக ஊடகங்களில் வெளியான செய்திகள் தவறானவை என அவர் மேலும் தெரிவித்தார்.

அத்துடன் நடந்து கொண்டிருக்கும் இழுபறிக்கும் எதிர்கட்சிக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை எனத் தெரிவித்த அவர் மாகாணசபையின் நிர்வாக விடயங்களில் ஆளுங்கட்சியினருக்கும் முதலமைச்சருக்கும் மாகாண ஆளுனருக்கும் இடையிலான முக்கோண முரண்பாட்டின் விளைவே இப் பணிப்புறக்கணிப்பு என்றும் கருத்தறிவித்தார்.

## சம்பூர் மக்களுக்கு..

சீதனவெளியில் வைத்து மக்களிடம் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்பட்டன.

ஹபிட்டாட் ஹியூமானிட்டி நிறுவனத்தாலும், சர்வதேச இந்திய படப்பிடிப்புக் கழகத்தாலும் அனுசரணையளிக்கப்பட்ட இவ் வீட்டுத்திட்டத்தின் திறப்புகளை கிழக்கின் இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் லால் பெரேரா மற்றும் திருகோணமலை மாவட்ட அரச அதிபர் ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் ரி.ரி.ஆர்.டி. சில்வா ஆகியோர் கையளித்தனர்.

## மருத்துவ வண்டியில்..

என்றும் இதற்கு காரணம் திருகோணமலைக்கு மாற்றப்பட்டவரை மீண்டும் கிண்ணியா வைத்திய சாலைக்குள்ளே எடுக்க மகப்பேற்று மருத்துவர் அனுமதி வேண்டும் எனவும் கூறப்பட்டுள்ளது.

சுமார் இரண்டு மணி நேரத்திற்கு பின்பு திருமலையில் இருந்து மருத்துவர் வரவழைக்கப் பட்டதன் பின்பே தாயின் இரத்த அழுத்த பரிசோதனை மற்றும் ஏனைய பரிசோதனைகள் நடைபெற்றுள்ளன.

## கிண்ணியாவில் பதற்றம்..

கைப்பற்றியுள்ளனர். இதனையடுத்து பிரதேச வாசிகளுக்கும் விசேட அதிரடிப்படையினருக்கும் இடையே முறுகல் நிலை தோன்றியது.

அவ்விடத்திற்கு விரைந்த காவல்துறையினர் ஆறு விறகு வண்டில்களையும் கிண்ணியா காவல் நிலையத்திற்கு எடுத்துச் சென்றுள்ளனர் இச் சம்பவத்தினால் கிண்ணியா பிரதேசம் பெரும் பதட்ட நிலையை அடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது

## பாரதி விதவைகள்..

மாகாணசபை உறுப்பினர் திரு. நாகேஸ்வரன், பிரதேச சபை உறுப்பினர் ஜனாப். ஏ.ஜே. நிஸ்மி மற்றும் பலர் கலந்துகொண்டார்கள்.

திரு. இ. பாஸ்கரன் குருக்கள் பாரதிபுரத்தில் விதவைகள் சங்கமொன்றின் தேவையை வலியுறுத்திப்பேசியதுடன் அதற்காக எவ்வாறு ஆவணங்கள் பேணப்படவேண்டும் என்றும் தெரிவித்தார். தொடர்ந்து திட்டப்பணிப்பாளர் பேசுகையில் நாங்கள் கிராம அபிவிருத்தி அமைப்பின் ஊடாக சிறு தொழிலுக்கான ஆலோசனைகளை வழங்குவதற்கு முன்னிற்போம் என்றார். மாகாணசபை உறுப்பினர் பேசுகையில், இவ்வருட நிதி ஒதுக்கீடு செய்யப்படும்போது அதில் ஒரு பகுதியை பாரதிபுர விதவைகள் சங்கத்திற்கு ஒதுக்குவேன் என வாக்களித்தார்.

சங்கத் தலைவி பேசுகையில் எமது விதவைகளுக்கு வாழ்வாதார உதவிகளைச் செய்ய முன்வாருங்கள் என்றார்.

மேலும் கிராம சேவகர் கூறுகையில், வன்செயல்களினால் 23 பேரும், கைவிடப்பட்ட விதவை 27 பேரும், இயற்கை அனர்த்தம் மூலம் 81 பேரும் விதவைகளாக வாழ்கிறார்கள். இவர்களுக்கான உதவிகளை பிரதேச செயலாளர் ஊடாக செய்ய ஏற்பாடு செய்வேன் என்றார். *(ஜவாஹிர்)*

## கிழக்கு மாகாண சபைக்கு..

சனாதிபதியும் தெளிவாக இத்தகவல்களைத் தெரிவித்துள்ளோம்" எனக் கூறியுள்ள இலங்கையின் பாதுகாப்புச் செயலர் இவ்விடயத்தை இலங்கையில் இறுதிக்கட்ட யுத்தம் மிக முனைப்புடன் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதே தாம் தெரிவித்துவிட்டதாகவும் கூறியுள்ளார்.

அக்காலத்தில் நடைபெற்ற உயர் மட்டக் கலந்துரையாடல்களில் இலங்கையின் சார்பில் சனாதிபதியின் செயலர் லலித் வீரதுங்க, அப்போதைய சனாதிபதியின் சிரேட்ட ஆலோசகர் பசில் இராசபக்ச, பாதுகாப்புச் செயலர் கோத்தாபாய இராசபக்ச ஆகியோரும் இந்திய அரசின் சார்பில் அந் நாட்டின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே. நாராயணன், வெளிவிவகாரச் செயலர் சிவ்சங்கர் மேனன், மற்றும் பாதுகாப்புச் செயலர் விஜய் சிங் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

பல சுற்றுக்கள் நடைபெற்ற இக்கலந்துரையாடல்களின் போது ஒரு கட்டத்தில் இலங்கைத் தரப்பு மாகாண சபைகளுக்கு காவல்துறை அதிகாரத்தைப் பகிர்வதானது சிறுபான்மை மக்களின் நலன்களுக்கு எதிராகவே அமைந்து விடும் எனத் தெரிவித்திருந்தது. அதனை மேலும் உறுதிப்படுத்திக்கொள்வதற்காக இந்தியத் தரப்பின் நாராயணன் தமது பாதுகாப்புச் செயலர் விஜய் சிங் கிடம் இவ்விடயம் பற்றிய அவரது அபிப்பிராயம் என்ன என வினவியபோது விஜய் சிங் கோட்டாபாண இராசபக்சவின் கருத்தையே முழுமனதுடன் ஆதரித்திருந்தார் என இலங்கையின் பாதுகாப்புச் செயலர் அண்மையில் ஆங்கில ஊடகம் ஒன்றுக்குச் செவ்வியுள்ளார்.

தமிழர்களிற்கு 13 பிளஸ் என்னும் தீர்வை வழங்குவேன் என சனாதிபதியால் இந்தியாவிற்கும் ஏனைய நாடுகளுக்கும் வழங்கப்பட்ட உத்தரவாதமானது 13வது திருத்தத்தை முழுமையாக செயல்படுத்துவது எனத் தப்பார்பிதம் செய்தமை தவறானது எனத் தெரிவித்த கோட்டாபாய அவர்கள் 13பிளஸ் என்பது எல்லாச் சமூகங்களாலும் ஏற்றுக்கொள்ளப் படக்கூடிய தீர்வொன்றையே சனாதிபதி அச் சொல்லின் ஊடாகக் கருதியிருந்தார் எனவும் தெரிவித்தார்.

13வது திருத்தச் சட்டம் முழுமையாக செயலுருப் பெறுமானால் வடக்கில் மட்டுமல்ல ஏனைய மாகாணங்களிலும் நிலைமைகளைத் தலைகீழாக்கி விடும் எனத் தெரிவித்துள்ளார் பாதுகாப்புச் செயலர்.

## தரிசனம் தொலைக்காட்சி..

சர்வோதயத்தின் ஆதரவில் திருமலையின் ஒரே தொலைக் காட்சி அலைவரிசையான தரிசனம் வழங்கிய பாடசாலை மாணவர்களுக்கான பொது அறிவுப் போட்டி 14.06.2013 சன்சைன் கேட்போர் கூடத்தில் சிறப்பாக நடந்தேறியுள்ளது.

இந் நிகழ்வில் முதற்கட்டமாக தேர்வுசெய்யப்பட்ட நான்கு பாடசாலைகளின் மாணவ மணிகள் பங்கு பற்றியிருந்தனர். திருகோணமலை லிங்கநகர் கோணலிங்க மகா வித்தியாலயம், மட்கோ அல்.மின்ஹாஜ் முஸ்லிம் மகாவித்தியாலயம், விபுலானந்தா கல்லூரி, ஜமாலியா முஸ்லிம் மகாவித்தியாலயம் ஆகியவற்றின் மாணவர்கள் போட்டியாளர்களாகப் பங்கேற்ற இப் பொது அறிவுப் போட்டியின் இறுதிப் போட்டியில் கோணலிங்கம் மகா வித்தியாலயம் சிறந்த பெறுபேறுகளுடன் முதலாமிடத்தை வென்றுள்ளது.

இப் போட்டிகளுக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் எம்.ரி.ஏ நிசாம், நகரசபைத் தலைவர் திரு. செல்வராசா, சர்வோதயத்தின் திருமலை மாவட்ட இணைப்பாளர் வி.ஜீவராஜ் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாக கலந்து கொண்டு மாணவர்களுக்கான பரிசில்களை வழங்கி கௌரவித்தார்கள்.

இந் நிகழ்வு தொடர்பாகத் தனது கருத்தை தரிசனம் தொலைக்காட்சி அலைவரிசையின் பணிப்பாளர் திரு. திருமலை சந்திரன் அவர்கள் தெரிவித்த போது " இந் நிகழ்ச்சிக்கு அனைவரும் உளப்பூர்வமாகத் தமது ஆதரவை தெரிவித்திருந்ததாகவும், இப் பொது அறிவுப் போட்டியின் முதற் கட்டத்தில் தேர்வு செய்யப்பட்ட நான்கு பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற பேட்டியில் வெற்றியாளராகத தெரிவாகியுள்ள பாடசாலை அடுத்த கட்டத்தில் மேலும் நான்கு பாடசாலைகளுடன் மோதவுள்ளதாகத் தெரிவித்தார்.அத்துடன் இந் நிகழ்வுக்கு முழுமையான அனுசரணை வழங்கிய சர்வோதய நிறுவனத்திற்கும் அதன் மாவட்ட இணைப்பாளருக்கும் தனது நன்றியைத் தெரிவித்தார்.

## துளசிபுரத்தில் ஆர்ப்பாட்டம்

திருகோணமலை துளசிபுரம் கிராம வாசிகள் கடந்த திங்கட்கிழமை இலங்கை மின்சார சபை அலுவலகத்துக்கு முன்பாக கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். அடிக்கடி ஏற்படும் மின்கட்டண அதிகரிப்புக் காரமாக வாழ்க்கை நடத்த முடியாதுள்ளதாகவும், தமது பிள்ளைகளின் எதிர்காலம் பாதிக்கப்படுவதாகவும் தெரிவித்தே குறித்த ஆர்ப்பாட்டத்தில் இவர்கள் கலந்துகொண்டுள்ளனர்.



## பேஸ் புக்கிற்கு..

கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தில் பொருளாதார அபிவிருத்தியானது எவ்வாறு நாட்டின் நல்லிணக்கத்தையும் சமாதனக் கட்டமைப்பையும் பாதிக்கும் என்ற தலைப்பில் ஆற்றிய உரையிலேயே பாதுகாப்புச் செயலர் சமூக வலைத்தளங்கள் தொடர்பான தனது கருத்துக்களை இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தேசிய பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தலை உருவாக்கக்கூடிய வலுக்கொண்டவையாக சமூக வலைத்தளங்கள் உருவாகி வருகின்றபடியால் அவற்றைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர வேண்டிய தேவை உள்ளது என்ப பாதுகாப்புச் செயலர் தெரிவித்துள்ளார்.

எனினும் வலைத்தளங்களைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருவது அசாத்தியமானது என ஊடக அமைச்சின் செயலர் சரித்த ஹேரத் அண்மையில் பி.பி.சி யின் சந்தேசிய சிங்கள சேவைக்கு அளித்த பேட்டியோன்றில் தெரிவித்திருந்தார்.

"இலங்கை தொடர்பாக பத்திரிகைகளிலோ தொலைக்காட்சிச் சேவைகளிலோ வெளியாகும் கருத்துக்களை எமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருவது அசாத்தியம் அத்துடன் உலகின் ஏதாவதொரு இடுக்கிலிருந்து நிர்வகிக்கப்படும் வலைப்பின்னல் தளங்களை நாடொன்று முடக்குவது என்பதும் அசாத்தியமே" என அவர் தெரிவித்திருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## அறிந்துகொள்ளுங்கள்

### புவி

எதிர்காலம்...

சூரியன் அழிவில்லாத மற்றும் நிலையான ஒன்றாக இருந்தாலும், குறைந்த எரிமலையாக்கத்தின் காரணமாக புவியின் உட்புற குளிர்ச்சி பெரும்பான்மையான வளி மண்டலத்-தையும் கடற் பரப்பையும் குறைத்திருக்-கக்கூடும். அடுத்த நூறு கோடி வருடங்களில் புவியின் மேற்பரப்பில் உள்ள தண்ணீர் அனைத்தும் மறைந்தி-ருக்கும். மேலும் புவியின் சராசரி வெப்பநிலை 70 பாகை செல்சியசையை வந்தடையும். அந்தக் காலக் கட்டத்தி-லிருந்து அடுத்த 500 மில்லியன் வருடங்-களுக்கு புவி வாழ்வதற்கு ஏற்றதாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இருந்தபோதிலும் வளிமண்டலத்தில் உள்ள நைட்ரோஜன் நீக்கப்படுமானால் இது மேலும் 2.3 பில்லியன் ஆண்டுகளுக்கு நீடிக்கப்படலாம்.

சூரியன் அதன் பரிணாம வளர்ச்சியில் மற்றும் 5 பில்லியன் வருடங்களில் ஒரு மாபெரும் சிகப்பு நட்சத்திரமாக மாறும். சூரியன் தற்போதைய அரைவிட்டத்தை போல தோராயமாக 250 மடங்கு விரிவடையும் என்று உருமாதிரிகள் கணிக்கின்றன.1 யுரு (15 கிமீ) புவியின் தலைவிதி தெளிவாகத் தெரியவில்லை. மாபெரும் சிகப்பு நட்சத்திரமாகிய சூரியன், தன்னுடைய அதிகபட்ச ஆரத்தை எட்டும் போது, சூரியன் தன் எடையில் 30மூத்தை இழக்கும் அப்போது அலைகளி-னால் ஏற்படும் தாக்கம் இன்றியே, புவி சூரியனிலிருந்து 1.7 AU (25 கிமீ) அளவு கொண்ட சுற்றுப்பாதைக்குத் தள்ளப்படலாம். அவ்வாறு தள்ளிப்போவதால், சூரியனின் வெளி மண்டலத்தின் தாக்கத்திலிருந்து புவி தன்னைக் காத்துக் கொள்ளும், ஆனால் சூரியனின் அதிகமாகும் ஒளிர்வுக் கதிர்களால், எல்லா உயிரினங்களும் அழிந்து போகும். எனினும், சமீபத்திய ஆராய்ச்சியின்படி அலைகளால் ஏற்படும் தாக்கத்தால், புவி அதன் சுற்றுப்-பாதையிலிருந்து விலகி, மாபெரும் சிகப்பு நட்சத்திரமான சூரியனின் வளிமண்ட-லத்தில் நுழைந்த முழுவதுமாக கரைந்து போகலாம்.

**புவியின் சேர்மானமும் கட்டமைப்பும்**




புவி ஒரு திடமான கிரகம், அதாவது முழுவதும் காற்றாலே ஆன மாபெரும் வாயுக்கிரகமான வியாழன் போலல்லாது கடினமான உடலால் ஆனது.

இது சூரியக் குடும்பத்திலுள்ள நான்கு திட கிரகங்களுள் உருவத்திலும் திண்மத்திலும் மிகப் பெரியது. இந்த நான்கு கிரகங்களில், புவி அதிக அடர்த்தியானதும், மிகுந்த மேற்பரப்பு புவியீர்ப்பு விசையைக் கொண்டதும், வலிமையான காந்தப் புலனைக் கொண்டதும் மற்றும் வேகமான சுழற்ச்சியைக் கொண்டதுமாகும். திடக் கிரகங்களிலேயே புவியில் மட்டுமே டெக்டோனிக் தட்டுகளின் நகர்தல் காணப்படுகிறது.

(தொடரும்.)

## ஆராயமல் செய்த காரியம் ஆபத்தில் முடியும்

ஒரு மலையடிவாரத்தில் பெரிய ஏரி ஒன்று இருந்தது. அவ் ஏரியானது எப்பொழுதும் செழிப்பாகவே காணப்-பட்டது. கடுமையான கோடை காலத்தில் கூட அவ் ஏரியில் நீர் வற்றுவதில்லை. அதனால் அதில் நிறைய உயிரினங்கள் வசித்து வந்தன. அதே போல் அங்கு பல தவளைகளும் வசித்து வந்தன. ஒரு நாள் அந்த ஏரிக் கரைக்கு எலி ஒன்று வந்தது. அங்கு துள்ளிக் குதித்து தன்னை மறந்து விளையாடிற்று. இது கண்ட ஒரு தவளை எலியிடம் வந்து தன்னை அறிமுகப்படுத்தியது. அன்றி-லிருந்து அவ் எலியும் தவளையும் நண்பர்-களாயின. அன்று முதல் எலி அவ்வேரிக் கரையிலேயே ஒரு மரத்தின் அடியில், வளையில் வசிக்க ஆரம்பித்தது. மிகவும் சந்தோசமாக அவ் எலியாரின் வாழ் நாட்கள் கழிந்து கொண்டிருந்தன. ஒவ்வொரு நாளும் விடிவதும் ஆசை தீர தவளையுடன் விளையாடுவதும், கிடைத்த பழங்கள், காய்கள் என்று அனைத்தையும் சாப்பிடுவதும் களைத்துப்போனால் ஓய்வெடுப்பதும் பின்னர் மீண்டும் ஏரியில் துள்ளிக் குதித்து விளையாடுவதுமாக அது மிகவும் சந்தோசமாக இருந்தது. ஒரு நாள் மாலை எலி தவளையிடம் "நண்பனே இவ்வேரியின் எதிர்க் கரையில் எனது உறவினர் பலர் இருக்கின்றனர். நான் அவர்களை காண விரும்புகின்றேன். என்னால் நீரில் நீந்திச் சென்று அக்கரை செல்ல முடியாது. நீதான் எனக்கு அக்கரை செல்ல உதவவேண்டும்" என்றது. இதைக்கேட்ட தவளை எவ்வாறாயினும் எலிக்கு உதவ வேண்டும். ஆனால் எப்படி உதவுவது என்று ஆலோசித்தது. பின்னர் அதற்குத் தோன்றிய யோசனையை எலியிடம் கூறியது. அது நல்ல யோசனை என்று கூறி எலியும் தவளையின் யோசனைப் படி நடக்க சம்மதித்தது. பின்னர் ஓர் கயிற்றுத் துண்டை தேடி எடுத்து வந்து எலியுடன் தன்னை அக்கயிற்றால் பிணைத்துக் கொண்டது. எலியைத் தன்னுடன் கூட வரும்படி அழைத்து, ஏரி நீரில் குதித்து மூழ்கிற்று. கயிற்றால் இணைக்கப்பட்ட எலியும் கூட இழுத்துச் செல்லப்பட்டது. எலியால் இப்பயணத்தை ரசிக்க முடியவில்லை. மாறாக பயத்தி-னால் நடுங்கிப் போனது. தவளை வெகு ஆழத்தில் சென்றதும் எலியும் பல முறை நீரில் மூழ்கி எழுந்து தத்தளித்தது. மேலே பறந்து கொண்டிருந்த கழுகு ஒன்று அதைக் கண்டது. திடீரென்று கீழே பறந்து வந்து எலியைத் தன் அலகால் தூக்கியது. கயிற்றால் எலியுடன் பிணைக்கப்பட்ட தவளையும் கூடவே கழுகால் எடுத்துச் செல்லப்பட்டது. இரண்டையும் எடுத்துச் சென்ற கழுகு ஓர் இடத்தில் இறக்கி அவை இரண்டையும் தின்றது.






## பெண் விடுதலை பற்றி பாரதியார்!

தொடர்ந்தும்..

1906ல் சதி என்னும் உடன்கட்டை ஏறும் பழக்கத்தைத் துளஸிபாயி என்னும் கதையின் மூலம் வன்மையாகக் கண்டித்த பாரதி புதுவை சென்ற பின், தீவிர மதவாதியாக மாறிய காரணத்தினால் உடன்கட்டை ஏறும் பழக்கத்தை ஆதரிக்கும் நிலைக்கு வந்துவிட்டார்.

1910 பிப்ரவரியில் "கர்மயோகி" இதழில் பாரதி எழுதியதாவது:

"நமது பூர்வகாலத்து ஸ்திரீகளில் பிராண நாதர்களைப் பிரிந்திருக்க மனமில்லாமல், உடன்கட்டையேறிய ஸ்திரீகள் உத்தமிகளாவார்கள். இனி, எதிர்காலத்திலே தர்மத்தின் பொருட்டாகவே வாழ்ந்து அதற்காகவே மடிந்து இதன் மூலமாகவேத் தமது நாயகர்களுடைய ஆத்மாவுடன் லயப்பட்டு நிற்கும் ஸ்திரிகளே மஹா ஸ்திரிகளாவார்கள்." 1909 ஆகஸ்ட் இந்தியாஹ இதழில், ஒழுக்கம் உள்ள பெண்களைப் பற்றிப் பாரதி கூறும்போது, "ஓ இந்தியனே! சீதை, சாவித்ரி, தமயந்தி இவர்களும், இன்னும் இவர்களைப் போன்ற ஸ்திரி ரத்தினங்களும் உன் பெண்மணிகளாவர். ஒழுக்கத்திற்கு இவர்களை நமக்கு முன்மதிரியாக வைத்துக் கொள்ளலாம்" என்கிறார்.

இன்னும் பிற்காலத்தில் 1920 மே மாதத்தில் "தேசிய கல்வி" என்ற தலைப்பில் பாரதி எழுதும்போது பெண்கள் விவாகரத்து செய்து கொள்ளக்கூடாது என்கிற முடிவுக்கு வந்துவிட்டார். அதுகுறித்து இவர் கூறுவதாவது: "காதல் விடுதலை வேண்டுமென்று கூறும் கட்சியொன்று ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் சிற்சில பண்டித பண்டிதைகளால் ஆதரிக்கப்படுகிறது. அக்னி சாரீ வைத்து "உனக்கு நான் உண்மை, எனக்கு நீ உண்மை" என்று சத்யம் பண்ணிக் கொடுப்பதும், மோதிரங்கள் மாற்றுவதும், அம்மி மிதிப்பதும், அருந்ததி காட்டுவதும் முதலிய சடங்குகளெல்லாம் அனுபவத்தில் சஹிக்கத்தக்க அல்லது சஹிக்கத் தாகாத பந்தங்களாகவே முடிகின்றன-வென்றும், ஆதலால் அவற்றை இஷ்டப்படி அப்போதைக்கப் போது மாற்றிக் கொள்வதென்பதும், ஆதலால் "விவாகம் சாச்வபந்தம்" என்று வைத்தல் பிழையென்றும் மேற்படி கயார் சொல்கிறார்கள்...

ஆனால் தேசியக் கல்வியைக் குறித்து ஆராய்ச்சி செய்கிற நாம், மேற்படி விடுதலைக் காதற்-கொள்கையை அங்கீகாரம் செய்தல் சாத்தியமில்லை... விடுதலைக் காதலாகிய கொள்கைக்கும் மணவாழ்க்-கைக்கும் பொருந்தாது. மண வாழ்க்கை ஒருவனும் ஒருத்தியும் நீடித்து ஒன்றாக வாழாவிட்டால் தகர்ந்து போய்விடும். இன்று ஒரு மனைவி, நாளை வேறு மனைவி என்றால் குழந்தைகளின் நிலைமை என்ன ஆகும்? குழந்தை-களை எப்படி நாம் சம்ரஷணை பண்ணமுடியும்? ஆதலால் குழந்தைக-ளுடைய சம்ரஷணையை நாடி ஏகபத்னிவிரதம் சரியான அனுஷ்டானம் என்று முன்னோரால் ஸ்தாபிக்கப்பட்டது.

(கீற்று) (தொடரும்..)

## அப்பிள் புடிங்



**தேவையான பொருட்கள்:** சிறு துண்டாக வெட்டிய அன்னாசிப்பழம் - 1 தம்ளர், சிறு துண்டாக வெட்டிய அப்பிள் - 1 பழம், ரவை - 200 கிராம், சீனி - கால் கி.கி, வனிலா - 1 மே.க, மாஜரீன் - 50 கிராம், தண்ணீர் - 4 தம்ளர், காய்ச்சிய பால் - 1 தம்ளர், கலறிங் - அளவிற்கு, உப்பு - 1 சிட்டிகை

**செய்முறை:** கஜுவைச் சிறு துண்டுகளாக வெட்டிக் கொள்ளவும். மாஜரீனை தாச்சியில் இட்டு உருக வைத்து கஜுவையிட்டுப் பொன்னிறமாகப் பொரித்தெடுத்துக் கொள்ளவும். தாச்சியிலுள்ள மிகுதி மாஜரீனில் வெட்டிய பழங்களையிட்டு வதக்கியெடுத்துக் கொண்ட பின் அத்தாச்சியினுள் ரவையையிட்டுப் பொன்னிறமாக வறுத்தெடுத்துக் கொள்ளவும். தண்ணீரைப் பிறிதொரு பாத்திரத்தில் விட்டுக் கொதிக்க வைத்து நன்கு கொதித்ததும் ரவையைக் கொட்டிக் கிளறி, பழவகை, பால், சீனி என்பன சேர்த்து சீனி உருகியதும் வனிலா, கஜு, கலறிங் என்பன சேர்த்து இறக்கி நன்கு ஆறிய பின்பு குளிர்சாதனப் பெட்டியில் வைத்தெடுத்துப் பரிமாறலாம்.

## தேன் குழல் [ஜிலேபி]



**தேவையான பொருட்கள்:** கோதுமை மாவு - 1 சுண்டு (நிரப்பி), தயிர் - 6 மே.க, சிவப்பு கலறிங் - 1 தே.க, தேங்காயெண்ணெய் - அரை போத்தல், சீனி - 250 கிராம், வனிலா - 1 தே.க, சிவப்பு கலறிங் - 1 தே.க, ஸ்ரோபரி எசன்ஸ் - 2 துளிகள்

**செய்முறை:** மாவை அரித்துப் பிளாஸ்ரிக் பாத்திரத்திலிட்டுத் தயிரும் அளவாகத் தண்ணீரும் விட்டுத் தோசைமாப் பதத்திற்குக் கரைத்து 12 மணி நேரம் வரை புளிக்க வைக்கவும். பின்பு தாச்சியில் சீனியைப் போட்டுத் தண்ணீரும் விட்டு அடுப்பில் வைத்துக் காய்ச்சவும். பாகு காய்ச்சும் போது முதலில் சீனி முழுவதும் கரைந்து பின்பு வெளுவெளுப்பாக நுரைத்துப் பொங்கி, இந் நுரையடங்கிப் பாகு கொதிக்கும் பதத்தை அடைந்ததும் (வரலால் தொட்டுப் பார்க்கும் போது பாகு பிசுபிசுப்பாக கையில் ஒட்டும்) அடுப்பில் இருந்து இறக்கிவனிலா, கலறிங், எசன்ஸ் என்பவற்றை விட்டு நன்கு கலக்கி வைத்துக் கொள்ளவும். அடிப்பகுதி தட்டையான தாச்சியை எடுத்து எண்ணெய் விட்டு நன்கு கொதிக்க வைத்த பின் ஓர் தடித்த துணியில் மாக்கரைசலை ஊற்றிப் பொட்டலமாக இறுகப் பிடித்துக் கொண்டு பொட்டலத்தின் அடியில் ஓர் துவாரத்தை ஏற்படுத்திய பின், கொதிக்கும் எண்ணெயில் வட்டமாக வரக்கூடியதாகப் பிழிந்து கொள்ளவும். இவ்வண்ணமே மற்றைய முறுக்குகளையும் ஊற்றிச் சிவக்கப் பொரித்தெடுத்து [illegible] பாகில் அமிழ்த்தி வைத்து சிறிது நேரத்தின் பின் வடியவிட்டு எடுத்து ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கி வைத்து ஆறிய பின்பு பரிமாறலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்த வார ஆங்கிலப் பத்திரிகைகளின் மீதானபார்வை...



## the SUNDAY TIMES

### சீன மீன்பிடிப் படகுகளுக்கு இலங்கைக்கொடி

இலங்கையின் பொருளாதார மீன்பிடி வலையத்தைத் தவிர்த்து ஏனைய கடற்பிரதேசத்தில் மீன்பிடியை மேற்கொள்வதற்கு சீன மீன்பிடிப் படகுகளுக்கு அனுமதியளித்துள்ள இலங்கை அப்படகுகளில் இலங்கைக் கொடியினைப் பாவிப்பதற்கும் அனுமதியளித்துள்ளது. இதற்கான ஒப்பந்தம் இலங்கையின் முதலீட்டுச் சபையுடன் சீனக் கம்பனியினால் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக முதலீட்டு அபிவிருத்தி அமைச்சின் தகவல்கள் தெரிவித்தன. அந்த ஒப்பந்தத்தின் படி பிடிபடும் மீன்களின் 90வீதமானவை சீனாவுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதுடன் 10வீதமானவை இலங்கையின் மீன்பிடிக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்படவுள்ளது. முதல் வருடத்தில் இலங்கைக்கு சுமார் 1.3 பில்லியன் ரூபாய்கள் வருமானத்தைத் திரட்டித் தருமென எதிர்பார்க்கப்படும் இம்மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடவுள்ள சீனப்படகுகள் டிக்கோவிட்ட மீன்பிடித் துறைமுகத்திலிருந்து தமது நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என தெரியவருகின்றது. இம்மாதத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள இம்மீன்பிடி நடவடிக்கைக்காக 150 அடி நீளமான 4 படகுகள் இம்மாதத்தில் தொழிற்படத் தொடங்கும் என்றும் தொடர்ந்து சுமார் 16 படகுகள் இந்நடவடிக்கையில் ஈடுபடும் என்றும் தெரியவருகின்றது.

### தளர்ந்து போகும் நாணய பரிமாற்ற கட்டுப்பாடு

உள்நாட்டு முதலீடுகளை அதிகரிப்பதற்காக மேலும் நாணயப் பரிமாற்றக் கட்டுப்பாடுகளை தளர்த்தவுள்ளதாக வெளிநாட்டு நாணய பரிமாற்றக் கட்டுப்பாட்டாளர் சந்திரவன்ச தெரிவித்தார். தற்பொழுது மேற்கொள்ளப்பட்ட தளர்வுகளுக்கு மேலதிகமாக இன்னும் பல பரிமாற்றக் கட்டுப்பாட்டு தளர்வுகளை மேற்கொள்ளவுள்ளதாக தெரிவித்த அவர் அக்கட்டுப்பாடுகள் எந்தெந்த விடயங்களில் தளர்வுகளை ஏற்படுத்தும் என்பதை மறுத்து விட்டார். கடந்தவாரம் மத்தியவங்கி சர்வதேச பணப்பரிமாற்றக் கட்டுப்பாடுகளில் இருந்த கடுமையான கட்டுப்பாடுகளிற் சிலவற்றைத் தளர்த்தியிருந்தது குறிப்பிடத்தக்கது. விரும்பிய நேரத்தில் விரும்பிய அளவு தொகையினை விரும்பியவாறு எடுத்துச் செல்ல முடியாத நிலை இருக்குமானால் அந்நாடுகளில் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் முதலீடுகளை மேற்கொள்ள பெரிதாக விரும்பமாட்டார்கள் என தெரிவித்த சர்வதேச பணப்பரிமாற்ற கட்டுப்பாட்டாளர் இதனாலேயே 1970ம் ஆண்டில் உருவாக்கப்பட்ட சில சர்வதேச பணப் பரிமாற்ற கட்டுப்பாடுகளில் தளர்வுகள் ஏற்படுத்தப்பட்டன என அவர் மேலும் தெரிவித்தார்.

### வெளிநாட்டு மோசடி நிறுவனங்களில் இலங்கை நிறுவனங்களின் நிதி

வெளிநாட்டில் சட்ட விரோத நடவடிக்கைகளில் ஈடுபடும் என சந்தேகிக்கப்படும் 10 நிறுவனங்களில் இலங்கையைச் சேர்ந்த 30 நிறுவனங்களின் நிதி முதலிடப்பட்டிருப்பதாக புலனாய்வு ஊடகத்துறையின் சர்வதேசக் குழு தெரிவித்துள்ளது. இவ்வாறு குற்றஞ்சாட்டப்பட்டுள்ள நிறுவனங்களின் பெயர்களையும் அவற்றில் ஈடுபடும் சட்டவாளர்கள், பங்காளர்கள், வாடிக்கையாளர்கள், கணக்காளர்கள், வங்கிகள் போன்றவற்றின் பெயர்களையும் இக்குழுவின் வலைப்பக்கமான www.icij.org என்ற தளத்தில் காணக்கூடியதாக இருப்பதாக அவ்வமைப்பு தெரிவித்துள்ளது.

### சிறுநீரக கோளாறின் சூத்திரதாரிகளாய் உர நிறுவனங்கள்

இலங்கையில் பரவிவரும் சிறுநீரக கோளாறுக்கான அடிப்படையாக இருப்பது சிலவகை உரங்களே என விவசாய அமைச்சர் தெரிவித்தார். இதனைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை குறிப்பாக வரைந்து தான் அமைச்சரவைக்குச் சமர்ப்பித்ததாக தெரிவித்த அமைச்சர் இதற்கான நடவடிக்கைகள் விரைவில் எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

### நீதிபதி பிணையில் உறுதியான சாட்சியங்கள் உள்ளன, இலஞ்ச ஆணைக்குழு

மூன்று லட்சம் ரூபா இலஞ்சப் பணத்தை பெற்றார் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ள ஹோமாகம மாவட்ட நீதிபதி சுனில் அபயசிங்க பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார். இப்பிணை 100 மில்லியன் ரூபா பெறுமதியான இரண்டு தனியாட்களின் பிணையாகவுள்ளது. எனினும் இலஞ்ச ஊழல் ஆணைக்குழு பணிநீக்கப்பட்ட சாட்சியங்கள் உறுதியாக இருப்பதாக தெரிவித்துள்ளது.

## SUNDAY OBSERVER

Sri Lanka's English Newspaper with the largest circulation

### 2013ல் வெளிநாட்டு நேரடி முதலீடாக 2 பில்லியன் டொலர்

ஐரோப்பிய மற்றும் ஆசிய நாடுகளிலிருந்து இவ்வருடத்தில் நேரடி முதலீடாக இலங்கைக்கு 2 பில்லியன் அமெரிக்க டொலர்களை பெற்றுக் கொடுக்கும் முயற்சியில் முதலீட்டு அபிவிருத்தி சபை செயற்பட்டு வருகின்றது. அச்சபையின் அமைச்சரின் கருத்துப்படி கனடா, அவுஸ்திரேலியா, பிரான்ஸ், ஜேர்மனி போன்ற நாடுகள் இலங்கையில் நிலவும் நிலையான சமாதானத்தை ஒட்டி இலங்கையில் முதலீடு செய்வதற்கு விருப்பம் கூறியுள்ளன எனத் தெரிவித்துள்ளார். இதற்காகப் பல ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படுவதாக தெரிவித்த அமைச்சர் கலப்பு அபிவிருத்தி திட்டங்களில் இலங்கையுடன் சேர்ந்து 600 மில்லியன் அமெரிக்க டொலர்களை க்ரெளன் குருப் முதலிடவுள்ளதாகவும் மேலும் 640 மில்லியன் டொலர்களை இலங்கை மற்றும் வெளிநாட்டு வர்த்தகர்கள் முதலிடவுள்ளதாகவும் அவற்றிற்கப்பால் வெளிநாட்டு பல்கலைக்கழகமொன்றிற்கான 140 மில்லியன் அமெரிக்க டொலர் முதலீடும் கொரியத் திட்டத்திற்கான 300 மில்லியன் முதலீடும் புதிய ஒப்பந்தங்களூடாக இலங்கைக்கு வரும் என்றும் தெரிவித்தார். ஜனவரி தொடக்கம் ஏப்ரல் மாதம் வரை சுமார் 218 மில்லியன் ரூபா பிரதேச நேர் முதலீடுகள் நிகழ்ந்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### வர்த்தமானி வெளியாகும் வரை பொறுத்திருங்கள் — எதிர்த்தரப்பினருக்கு தேர்தல் ஆணையாளர்

வடமாகாண சபைத் தேர்தல்கள் தொடர்பாக பல கேள்விகளை எழுப்பி வரும் எதிர்த்தரப்பினருக்கு பதிலளித்த தேர்தல் ஆணையர் அத்தேர்தல் தொடர்பான வர்த்தமானி வெளியாகும் வரை அவர்களைப் பொறுத்திருக்குமாறு கேட்டுக் கொண்டார். ஜூன் 24ஆம் திகதி இரவுடன் வடமேல் மற்றும் மத்திய மாகாண சபைகளுக்கான தேர்தல் திகதியும் அதன் பின்னரே அறிவிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

### பாராளுமன்ற தெரிவுக் குழுவிற்கு பிரதியீடு இல்லை

25 ஆண்டுகளுக்கு மேலாக 13வது திருத்தச் சட்டம் நடைமுறையில் இருந்தாலும் மக்கள் செல்வாக்கின்மையால் அதற்கு முன்னரான அரசு எவையும் அவ்வகை திருத்தச் சட்டத்தைக் கொண்டிருக்கவில்லை என்றும் பேளினில் கூடியிருந்த இராசதந்திரிகளிடையே பேசும் போது ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார். இத்திருத்தச் சட்டத்தின் மீதான மாற்றங்களை மேற்கொள்வதற்கு பாராளுமன்ற தெரிவுக்குழு ஒன்று தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்த அவர் இத்தெரிவுக் குழுவே அரசின் நாட்டதாரர்கள் (அக்கறையுடையவர்கள்) அனைவரிடமும் கலந்துரையாடி 13வது திருத்தச் சட்டம் சம்பந்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என மேலும் தெரிவித்தார்.

### வடமாகாணத் தேர்தல் செப்டம்பர் 7ல்

வடமாகாணம், வடமேல் மாகாணம் மற்றும் மத்திய மாகாணம் ஆகியவற்றின் மாகாண சபைத் தேர்தல்கள் செப்டம்பர் 7ல் நடைபெறும் என அரச மூலங்களிலிருந்து தகவல்கள் கசிந்துள்ளது. ஜூன் 20ஆம் திகதி வடமேல் மற்றும் மத்திய மாகாணங்கள் கலைக்கப்பட்ட பின்னரே தேர்தல் திகதி வெளி அறிவிக்கப்படும் எனவும் தெரிகிறது. அத்துடன் வடக்கின் தேர்தலும் நிகழும் என்றும் தெரியவருகின்றது. கலைக்கப்படவுள்ள இரு மாகாண சபைகளினதும் முதலமைச்சர்கள் 17ஆம் திகதி சனாதிபதியுடனான கூட்டமொன்றிற்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

## The Sunday LEADER

### வெளிநாட்டு இராசதந்திரிகளுக்கு விளக்கம்

13வது திருத்தச் சட்டத்தில் மேற்கொள்ளப்படவுள்ள மாற்றங்கள் தொடர்பாக வெளிவிவகார அமைச்சு வெளிநாட்டு இராசதந்திரிகளுக்கு வழங்கவுள்ளது. அரசு மேற்கொள்ளவுள்ள திருத்தங்களை முடிவு செய்த பின்னர் வெளிநாட்டு இராசதந்திரிகளுக்கு விளக்கம் அளிக்கவுள்ளதாக வெளிவிவகார அமைச்சின் செயலர் தெரிவித்துள்ளார்.

### மீனவர்கள் பெரு நட்டத்தை எதிர்கொண்டுள்ளனர்

ஜூன் 10ஆம் திகதி முதல் வானிலை அவதான நிலையங்களினால் வழங்கப்பட்டு வரும் அறிவுறுத்தல்களால் மீன்பிடிச் சமூகம் பெரு நட்டத்தை எதிர்கொண்டுள்ளது. கடந்த 10ஆம் திகதி முதல் கடல் பயங்கரமானதாக இருக்கும் என்று காலநிலை மற்றும் வானியல் திணைக்களம் தொடர்ந்து தன் அறிவிப்பை வெளியிட்டு வருகிறது. மீன்பிடியாளர் சங்கங்களின் சமாசத் தலைவர் கருத்துத் தெரிவிக்கையில் நாளொன்றுக்கு சுமார் 15 லட்சம் ரூபாய்களை மீன்பிடிச் சமூகம் இழந்து வருவதாக தெரிவித்தார்.

### எரிபொருள் தட்டுப்பாடு வரலாம்

குறுகிய காலத்தில் எரிபொருளுக்கு தட்டுப்பாடு வரலாம் என பெற்றோலிய கூட்டுத்தாபன ஊழிய சங்கத்தின் அடையாளம் காட்ட விரும்பாத ஒருவர் தெரிவித்துள்ளார். 9000 தொன் நிறையுள்ள மசகெண்ணெய் கொலன்-னாவ எண்ணெய்க் குதங்களுக்கு வந்து சேர்ந்திருந்தாலும் தற்போது வரை முத்துராஜவெலவில் உள்ள பெற்றோ-லிய களஞ்சிய சாலைகளுக்கு அம்மசகெண்ணெயில் இருந்து பிரித்தெடுக்கப்பட்ட பெற்றோலிய வகைகள் தற்போது வரை வந்து சேரவில்லை என தெரிவித்தார். இதனால் பெற்றோலிய பொருட்களுக்கான தட்டுப்பாடொன்றை குறுகிய காலத்தில் அனுபவிக்க நேரிடும் என அவர் தெரிவித்தார்.

### வலைப்பின்னல் தளங்களுக்கு புதிய சட்டம்

பத்திரிகை மற்றும் இலத்திரனியல் ஊடகங்களுக்கான புதிய நடத்தை விதிகளை அறிமுகப்படுத்த முனைந்துள்ள அரசு வலைப்பக்கங்களையும் ஒழுங்குபடுத்தும் சட்டங்களையும் உருவாக்கவுள்ளதாக ஊடகத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது. தற்போது இலங்கையில் இயங்கிவரும் வலைப்பின்னல் தளங்களை ஒழுங்கமைப்புக்குள் கொண்டுவருவதற்காக சட்ட வரைபை மேற்கொள்வதற்காக குழுவொன்று நியமிக்கப்படவுள்ளதாக ஊடகத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

### மட்டக்களப்பின் கோவில் கொள்ளையர்கள் பிடிபட்டனர்

மட்டக்களப்பில் கடந்த நாட்களில் மேற்கொள்ளப்பட்ட கோவில் கொள்ளைச் சம்பவங்களுடன் சம்பந்தப்பட்டவர்கள் என்ற சந்தேகத்தில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என இராணுவம் தெரிவித்துள்ளது. இவர்களில் இருவர் முறையே நடராஜா ராஜ்மோகன், மயில்வாகனம் சிவராசா ஆகியோர் என தெரிந்து கொண்டுள்ள இராணுவம் முதலாவது சந்தேக நபரை மட்டுமே மேலதிக விசாரணைகளுக்காக காவல்துறையிடம் கையளித்துள்ளதாகவும் மற்றையவர் இராணுவத்தின் பிடியிலிருந்து தப்பியோடி விட்டதாகவும் தெரிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முரசின் விளையாட்டு செய்திகள்

## வெளியாகின மாகாண நிலை விளையாட்டுப் போட்டி முடிவுகள்

கதிரவன்

கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களம் நடாத்திய மாகாண நிலை விளையாட்டுப் போட்டிகளின் முடிவுகள் வெளியாகியுள்ளன.

திருகோணமலை, மட்டக்களப்பு, கல்முனை, அம்பாறை உள்ளிட்ட கல்வி மாவட்டங்களில் உள்ள பதினேழு கல்வி வலயங்களில் இருந்து தலா மூன்று பாடசாலைகள் வீதம் பங்குகொண்ட இப் போட்டிகளில் பத்தொன்பது வயது பெண்களுக்கு நடாத்தப்பட்ட மேசைப்பந்துப் போட்டியில் திருகோணமலை புனித மரியாள் கல்லூரி இரண்டாம் இடத்தையும், பதினைந்து வயது பெண்கள் பிரிவில் மூன்றாம் இடத்தையும் பெற்றது. பத்தொன்பது வயது ஆண்களுக்கான சதுரங்கப் போட்டியில் ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி மூன்றாமிடத்தைப் பெற்றது. பத்தொன்பது வயதுப் பெண்கள் கரப்பந்தாட்டப் போட்டியில் உவர்மலை விவேகானந்தாக் கல்லூரி இரண்டாம் இடத்தைப் பெற்றது. இப் போட்டிகள் உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் ஜெ. உதயரெட்ணம் அவர்களால் அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் நடாத்தப்பட்டது.

aat SRI LANKA

நிறுவனத்தின் இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்த வேல் வர்த்தகக் கல்லூரியின்

இரண்டாவது தொகுதி மாணவர்கள்



Mr. Kokilan Ms. Prabalini Mr. Niyas

வேல் வர்த்தகக் கல்லூரி
இல. 159A, கடல்முக வீதி
திருகோணமலை

0777 555 738 026 222 76 22

## திருகோணமலையில் 23வது தியாகிகள் தினம்

23வது தியாகிகள் தினத்தை முன்னிட்டு திருஞானசம்பந்தர் வீதியில் அமைந்துள்ள வாசகசாலையில் தோழர் சத்தியன் தலைமையில் நடைபெற்ற அஞ்சலி கூட்டத்தில் பெரும்பாலான பொது மக்கள் கலந்து கொண்டு தோழர் பத்மநாபாவுக்கு அஞ்சலி செலுத்தியதுடன் போராட்டத்தில் தம் உயிரை அர்ப்பணித்த பொது மக்களுக்கும் அஞ்சலி செலுத்தினார்கள். அதனைத் தொடர்ந்து நடைபெற்ற நிகழ்வில் இலவச கண் பரிசோதனை முகாம் மற்றும் 300 இலவச மூக்கு கண்ணாடிகள் வழங்கப்பட்டதுடன் ஆதரவற்ற பெண்களுக்கு சிறு கைத்தொழில் ஊக்குவிப்பு பொருட்களும் வழங்கப்பட்டது. அத்துடன் இளைஞர்-களுக்கு சாரதி அனுமதிபத்திரம் எடுப்பதற்கான உதவித் தொகை வழங்கப்பட்டது. இந் நிகழ்வில் திருமலை மாவட்ட அங்கத்தவர்கள் அனைவரும் கலந்து கொண்டதுடன் இலங்கை தமிழ் அரசு கட்சியின் திருகோணமலை மாவட்ட தலைவர் துரைரெட்ணசிங்கம் மற்றும் உபதலைவர் கோணேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டு தோழர் பத்மநாபாவுக்கு அஞ்சலி செலுத்தியதுடன் பொதுமக்கள் முன்னிலையில் உரையாற்றினார்கள் அதனை தொடர்ந்து தோழர் தில்லைமுகிலனும் பொதுமக்கள் முன்னிலையில் உரையாற்றினார்.





## ஒரு கொலையின் கதை

8 (மாயன்)

"நீ என்ட புதுச் செருப்பை மாறிப் போட்டுக்கொண்டு போய்ட்டாய் அண்ணா.... நான் இண்டைக்குத் தான் கொழும்பால அத வாங்கிக்கொண்டு வந்தனான்......"

கேதீஸின் குரல் மெதுவாக அவனது அண்ணனின் ஆள் மனதினுள் ஒலித்து ஓய்ந்தது.

திகதி 08.04.2012. நேரம் இரவு 10 மணியைத் தாண்டிப் போய்க் கொண்டிருந்தது. கேதீஸ் மரணித்துக் கிடந்தான். அவனருகில் அவனது அண்ணன் மயங்கிக் கிடந்தான்.

அன்றும் திருகோணமலையின் பேரூந்து நிலையம் முன்னிரவில் மெதுவாகத் தனது களையை இழக்கத் தொடங்கியிருந்தது. பேரூந்து நிலையத்திற்கு முன்னாலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையம், பிரதான சந்தை என்பன வெறிச்சோடி விட்டிருந்தன. எனினும் பிரதான சாப்பாட்டுக் கடைகள் இரண்டிலும் சன சலசப்பு இருந்துகொண்டேயிருந்தது.

பேரூந்து நிலையத்தின் காவல் சாவடியில் காவல்க் கடமையில் ஈடுபட்டிருந்தவர்களுள் மூவர் காவலர்கள் நான்காமவர் தாணாக்காரர் (Constable). அவரது உள்ளுணர்வுகள் அவரை நிம்மதியாக இருக்க விடவில்லை. இருள் சூழ்ந்திருந் தெருவெங்கும் ஓர் அந்தர ஆத்மாவின் அலைவு.... அவரையும் அலைக் கழித்துக் கொண்டிருந்தது. அவரது கண்கள் இங்குமங்கும் அலைந்தன.

வேகமாக அவன் அந்த இருளில் இருந்து வெளி வருவதை அவர் அவதானித்தார்.

ஐயனார்கேணியின் இருண்ட தெருவின் ஊடாக தேசிய சேமிப்பு வங்கிக்கு முன் அவன் வரும் போது அவனது உருவம் மிகத் தெளிவாக அந்தத் தாணாக்காரருக்குத் தெரிந்தது. அவனுடைய நடையில் ஒரு அவசரம்.... முகத்தில் லேசான நடுக்கம்.... தாணாக்காரருக்கு அவன் ஒரு குற்றவாளி என்ற சிந்தனை உடனடியாகவே தோன்றிவிட்டது.

ஆனால் அவனோ தாணாக்காரரை நோக்கியே வேகமாக நடந்து வந்தான்.....

" சேர்... ஐயனார் கேணிக்குள்ள பெடியன் ஒருத்தன வெட்டிப் போட்டாங்கள்"

ஆக வந்தவன் ஒரு குற்றவாளியல்ல.

நேரம் சரியாக 10.20. அந்த நேரம் தான் கேதீஸின் கொலை முதன் முதலாக காவல்த்துறைப் புத்தகங்களில் பதிவானது. அவருடைய கைப் பேசியும் காவல்துறைத் தொடர்புச் சாதனமும் ஒரு சேர இயங்கத் தொடங்கின. கொலைச் செய்தி காட்டுத்தீயாய்ப் பரவத் தொடங்கியது.

தாணாக்காரரும் மற்றொரு காவலரும் உடனடியாக கொலைத் தளத்திற்கு விரைந்து சென்றார்கள். அதே வேளை அடையாளம் காணப்படாத யாரோ அவசர தொலைபேசி எண் 119ற்கும் அழைப்பை ஏற்படுத்தி விட்டிருந்தார்கள்.

பல முனைகளிலிருந்தும் காவல்துறையினர் சம்பவ இடத்தைச் சுற்றிக் கொண்டார்கள். சம்பவம் நடந்த இடம் முழுவதும் வெளிச்ச மேற்றப்பட்டிருந்தது. அழுகுரல்கள் தகவலை அயலவர்க்கு தெரியப் படுத்தியவுடன் தொலைபேசிகள் வாயிலாகச் செய்திகள் கணநேரத்தில் பரிமாற்றப்படத் தொடங்கின. மக்கள் அவ்விடத்தை முற்றுகையிட்டனர்.

காவல்துறையால் குற்றம் நடந்த பிரதேசத்தை அயைாளப்படுத்தும் மஞ்சள் பட்டியினுள்ளே அனாதரவாய்க் கிடந்தது கேதீஸின் சடலம். எவரும் அருகே அனுமதிக்கப்படவில்லை. தாயாரும் தகப்பனாரும் கூட அவனுக்கருகில் அனுமதிக்கப் படவில்லை. அதோ அந்த மதிற்கரையில் தாயார் கதறி அழுதபடி அமர்ந்திருக்கின்றார். தகப்பனார் யாருடனோ பேசியபடி இருக்கின்றார். தந்தைவழி மாமி, அவரது தமக்கை போன்றோர் தாய்க்கருகில் கதறியபடி இருக்கின்றார்கள். மனைவிவழி உறவினர்கள் யாவரும்' மற்றோர் பக்கத்தில் அழுதபடி இருக்கின்றார்கள்........

அவனது கழுத்தறுக்கப் பட்டிருந்த போதும் அக் கழுத்தில் கட்டப்பட்டிருந்த கறுப்புக் கயிறும் அக் கயிற்றில் இணைக்கப் பட்டிருந்த சிவலிங்கமும் அறுக்கப்படாமல் அப்படியே இருந்ததைப் பார்த்து



அந்தத் தாய் கதறிக் கொண்டேயிருக்கின்றாள். காவல் துறையினர் அங்குலம் அங்குலமாக தடயங்களைத் தேடிக் கொண்டிருந்தார்கள்.

அதே நேரத்தில் சீருடை அணியாத புலனாய்வுப் பிரவினர் பல்வேறு விதமான மனிதர்களாக அங்கு வருகை தந்து கூடியிருந்த மக்களுடன் மக்களாக நடமாடத் தொடங்கியிருந்தனர்.

அந்நடமாட்டத்தின் போது முக்கியமான மனிதத் தடயமொன்றை அங்கிருந்த மக்களிடமிருந்து அவர்கள் பெற்றுக் கொண்டனர். அவன் தன்னை அறியாமலே "நான் அவங்களக் கண்டனான்....நான் அவங்களக் கண்டனான்..." எனக் கதறியழுதபடி இருந்தான்.

காவல்துறையின் புகைப்படக் கருவி பல கோணங்களில் கேதீஸையும் அவன் விழுந்து கிடந்த பக்கங்களையும் படமெடுத்துக் கொண்டிருந்தது.

இப்போது கையுறை அணிந்த காவலர் ஒருவர் அவனை மெதுவாகத் தடவிப் பார்க்கின்றார். மிகவும் நிபுணத்துவம் அவரது தடவலில் தெரிகின்றது. முன்புற உடலில் காற்சட்டைப் பைக்குள்ளிருந்து மூன்று கைத்தொலைபேசிகளை அவர் வெளியே எடுத்து அருகில் வைக்கின்றார்.

மெதுவாகப் பின்புறமாகத் தடவும் போது பின்காற்சட்டைப் பைக்குள் இருந்து அவனது காசுப்பேழை வெளியே வருகின்றது. உள்ளிருந்து அடையாள அட்டை........

(தொடரும்)

மலைமுரசு பத்திரிகையின் உத்தியோகபூர்வ விநியோகத்தர்கள் – திருமலை நகர லியோ கழகத்தினர்
The official distributor of Malaimurasu is Leo club of Trincomalee Town

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை, ஸ்ரீராம் பிரதர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் 22.06.2013 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.